ஜெயப்பிரகாஷ் நாராயணின் இலங்கை விஜயத்திற்கும், இந்தியாவில் அவரின் தலைமையிலுள்ள சர்வோதய இயக்கத்திற்கும் எதுவிதத் தொடர்புமில்லை.

அவர் இரத்மலானை விமான நிலயத்தில் வந்து இறங்கியவுடன் பத்திரிகை நிருபர்களிடம் அவர் பேசிய போது இதனை அவரே வாய் விட்டுக் கூறியுள்ளார். அவரது இலங்கை விஜயத்தில் ஏதோ ஒரு மர்மம் உள்ளது. இந் நாட்டிலுள்ள விரல் விட்டு எண்ணக் கூடிய சர்வோதய ஆதரவாளர்களுக்குக் கூட அவரது விஜயம் ஒரே புதிராக இருக்கிறது.


# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 30 | ஜூன் 17 1968 | பக்கங்கள் 12 | விலை சதம் 1


# ஜெயப்பிரகாஷ் இலங்கைக்கு என் வந்தார்?

விமான நிலையத்தில் நடந்த காட்சி ஜெயப்பிரகாஷினுடைய விஜயத்தின் உண்மையான நோக்கத்தை வெளிக்காட்டியது. அவர் இலங்கைக்கு வந்திறங்கிய தினத்தில், கொழும்பில் அவர் பங்கு பற்றுவதற்கென தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தை யிட்டு ஜெயப்பிரகாஷே ஆச்சர்யப்பட்டாராம். அவருக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் படி, அவர் கொழும்பில் வந்து இறங்கியவுடன் நேரே நுவரேலியாவில் நடைபெறும் 'குயாக்கேர்ஸ்' மாநாட்டிற்குச் செல்வதெனக் குறிப்பிடப்பட்டிருந்ததாம். ஆனால், இங்கு அவருக்குக் கொடுக்கப்பட்டதோ வேறு விதமாக இருந்தது. இதை யிட்டு அவரே தனது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டார்.

திரு. ஜெயப்பிரகாஷ் 'குயாக்கேர்ஸ்' மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த முக்கிய அதிதியாகும். இக் 'குயாக்கேர்ஸ்' மாநாட்டின் நோக்கத்தைப் பற்றி ஒருவித செய்தியும் வெளியிடப்படவில்லை.

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் பங்குபற்றும் 'குயாக்கேர்ஸ்' மாநாட்டின் அந்தரங்க நோக்கத்தை அம்பலப்படுத்தக் கூடிய செய்திகள் எம்மிடம் உள்ளன.

நுவரேலியாவி நடைபெற்றுக்கொண்டிருக்கும் இம்மாநாட்டில் வேண்டியவர்கள் யாரும் பங்குபற்ற முடியாது. இம்மாநாட்டின் செலவுகள் முழுவதையும் சி. ஐ. ஏ. ஸ்தாபனம் பொறுப் பேற்றுள்ளது. இவர்களுக்கு அடிக்கடி பண உதவியும் இவ்விஸ்தாபனம் அளித்து வருகிறது. ஏகாதிபத்திய நாடுகளின் தூதுவர்களும் இந்நாட்டிலுள்ள உயர்தர பிற்போக்கு வாதிகளுமே இம்மாநாட்டில் பங்குபற்ற முடியும். இங்கு நடைபெறும் விவாதங்கள், எடுக்கப்படும் முடிவுகள் எவற்றையுமே ஒருவருக்கும் கூறமாட்டோமென அதில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆசியாவில் கம்யூனிஸத்தை எவ்வாறு 'முற்றுகை' இடுவது, அங்கு எத்தகைய சதி வேலை, சீர்குலைவு வேலைகளில் ஈடுபடுவது என்பவையே இம்மாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கும் முக்கிய விஷயங்களாகும். இரட்சிய; சோஷலிஸ விரோத சதிகள் யாவற்றிற்கும் இந்தியாவே தலைமை தாங்குவதுதான் இதில் முக்கியத்துவமான விஷயமாகும். இரண்டு வருடங்களுக்கு முன்


— 12-ம் பக்கம் பார்க்க

- அவசரகாலச் சட்டத்தை உருவாக்கி
- இரு கொத்தரிசியை ஒரு கொத்தாக்கி
- பொருட்களின் விலைகளைக் கூட்டி
- ரூபாவின் மதிப்பைக் குறைத்து
- கொள்ளை அடிக்கும் பெரும் முதலாளிகளுக்கு சலுகைகள் வழங்கி
- அடையாள அட்டையின் மூலம் நாட்டுமக்களை அடிமைகளாக்கி
- சாதி அமைப்பைத் தகர்க்கும் மக்கள் போராட்டங்களை நசுக்கி
- ஏகாதிபத்திய வாதிகளுக்கு நாட்டை அடகு வைக்கும் மக்கள் விரோத

## யு.என்.பி-தமிழரசு தமிழ்க் காங்கிரஸ்


ஆட்சிக்கு எதிராக

## கண்டனக் குரல் எழுப்பி அணி திரள்வீர்!



நியூயோர்க் ஹார்லெம்மில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் ஆயுதந் தாங்கிய பொலிஸின் அடக்குமுறைக்கு எதிராக நேருக்குநேர் நின்று போராடும் அமெரிக்க நீக்ரோவரை இப்படத்தில் காண்க.

## மா சே-துங் சிந்தனை



வலதுசாரி சிந்தனை முறையைக் கொண்டவர்கள் எமக்கும் விரோதிக்கு மிடையில் வித்தியாசப் படுத்தாது விரோதியை நம்மவராகவே கொள்கின்றனர் பரந்த வெகு ஜனங்கள் எந்த நபர்களை விரோதிகளாகக் கருதுகின்றனரோ அதே நபர்களை இவர்கள் நண்பர்களாகக் கருதுகின்றனர்.

-மா சே-துங்

### தலையங்கம்

# இ. போ. சா. வில் யு. என். பி. தந்திரம்

இ. போ. ச-வின் பணிப்பாளர் சபைக்கு யாரைத் தலைவராக்குவது என்பது குறித்து அரசாங்கத்திற்குள் ஏற்பட்ட 'குத்து வெட்டு'களுக்குப் பின்னர், அண்மையில் ஒரு புதிய பணிப்பாளர் சபையை தேசியமய சேவை அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாச நியமித்துள்ளார். முன்னாள் தலைவர் ஆர். ரி டி. சில்வாவையே மீண்டும் தலைவராக நியமிக்க வேண்டும் என திரு. சி. பி. டி. சில்வாவும், அவரது சகாக்களும் வற்புறுத்தியதால்தான் ஒரு புதிய தலைவரை நியமிப்பதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. கடைசியாக சி. பி. டி. சில்வாவை ஒருமந்திரி தாஜாபண்ணிச் சமாதானப்படுத்திவிட்டு வேறொருவரைத் தலைவராகக் கொண்டு ஒரு புதிய சபையை நியமித்துள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரை யார் தலைவராக இருக்கிறார், அச்சபையில் யார் அங்கத்தவராக இருக்கிறார் என்றெல்லாம் அக்கறை கொள்ள விரும்பவில்லை. இப்புதிய சபை, இ. போ. ச. தொழிலாளர்கள் நீண்ட நாட்களாக முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துவைக்கப் போகிறது; ஒழுங்கான, பாதுகாப்பான, இடைஞ்சலற்ற போக்குவரத்துச் சேவையை பிரயாணிகளுக்கு எவ்வாறு அளிக்கப் போகிறது என்பனபோன்ற பிரச்சினைகளைக் குறித்துத்தான் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

இதற்கிடையில் இப்புதிய சபைக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுள் ஒருவர் இ. போ. ச. வில் ஒரு தொழிலாளி என்பதையிட்டு அரசாங்கப் பிரச்சாரப் பீரங்கிகளும், அதற்கு ஒத்துக் குழல் ஊதும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் ஏதோ பிரமாதமான செயலைச் செய்துவிட்டதாகப் பீத்துகின்றன. அவ் அங்கத்தவரான யு. ஏ. ஹன்டிசிங்கோ இ. போ. ச. ஊழியர் என்பது உண்மை. தான் ஒரு மெக்கானிக் என்று அவரே பத்திரிகை நிருபர் ஒருவருக்குக் கூறியுள்ளார்.

இந் நியமனத்தின் மூலம் யு. என். பி. யாரை ஏமாற்ற முயல்கிறது. இந் நாட்டுத் தொழிலாளி வர்க்கம் யு. என். பி.யின் இப் பித்தலாட்டப் பிரச்சாரத்திற்கெல்லாம் இலகுவில் செவிசாய்ப்பதற்கோ, ஏமாறுவதற்கோ தயாராயில்லை. ஏகாதிபத்தியவாதிகளும் யூகோஸ்லேவிய துரோகிகளும் எவ்வளவோ முயன்றும் சாதிக்க முடியாததை யு. என். பி. பிற்போக்கு அரசாங்கம் சாதித்துவிடப் போவதில்லை.

தொழிலாளிக்கு நிர்வாகத்தில் பங்கு என்ற போர்வையில் யு. என். பி அரசாங்கம் தனது ஏஜெண்ட் ஒருவரை இ. போ. ச. வின் பணிப்பாளர் சபைக்கு நியமித்துள்ளது. இதன் மூலம் 'நம்மவர் ஒருவர் நிர்வாகத்தில் பங்கு கொள்கின்றார்' என்ற பிரமையை தொழிலாளி வர்க்கத்துக்குள் ஏற்படுத்தவே அரசாங்கம் முயல்கிறது. தொழிலாளி ஒருவர் நிர்வாகத்தில் பங்கு கொள்வதனால் அடிப்படையில்—முதலாளித்துவ அமைப்பில்—எதுவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை; சுரண்டல் ஒழியப் போவதில்லை; தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படப் போவதுமில்லை.

சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை என்று கூறப்படுவதுண்டு. சென்ற டிசம்பர்- ஜனவரியில் 26 நாட்களாகத் தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களும், தோட்டத் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து நடத்திய வீரமிக்க போராட்டத்தின்போது, துப்பாக்கியைக்காட்டி வேலைநிறுத்தத்தை முறியடித்து ஏகாதிபத்திய வாதிகளுக்கு உதவிய இந்த தொழிலாள விரோத அரசாங்கத்திற்கு, தொழிலாளருக்கும் நிர்வாகத்தில் பங்குகொடுக்க வேண்டி திடீர் 'ஞானோதயம்' ஏற்பட்டது எதனால்? தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு அளிக்கப்படும் என்று டட்லி சென்ற மேதினத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி, அதன் மூலம் தொழிலாளர் மத்தியில் ஒரு பிரமையை ஏற்படுத்தி, அவர்களின் வர்க்க உணர்வை முறியடிப்பதற்காகவே இந்தத் தந்திரத்தைக் கையாண்டிருக்கிறது யு. என். பி. ஆட்சி. ஆனால் தொழிலாளர்களுக்கு இத்தந்திரமெல்லாம் தலைகீழ்பாடம்.

# ஆர். ஜி. மறுபடியும் டட்லியுடன் சேருவாரா

அரசியல் வட்டாரத்தில் திரு. ஆர் ஜி. சேனநாயக்காவைப் பற்றிப் பல வதந்திகள் அடிபடுகின்றன. அவரது எதிர் காலத்தைப் பற்றிப் பல ஹேஷ்யங்கள் கூட கூறப்படுகின்றன. இலங்கை அரசியலில் அவர் ஒரு பிரச்சினைக்குரிய மனிதராகவே எப்போதும் இருந்து வந்துள்ளார். பலதடவைகள் பாராளுமன்றத்தில் பக்கம் மாறியிருக்கிறார்.

சமீப காலங்களில் அவர் சுதந்திர கட்சியினதும், முக்கூட்டு முன்னணியினதும் அரசியலிலிருந்து மாறுபட்டு வருகின்றார். சமசமாஜ கட்சியுடனும் கெனமன் திரிபுவாதக் கும்பலுடனும் கூட்டணி அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சுதந்திரக் கட்சியின் வலதுசாரி அணியில் திரு. ஆர். ஜி. இருந்து வருவது தெரிந்ததே. இவர் சுதந்திரக் கட்சியைவிட்டு வெளியேறி விடுவாரென்று பல தடவை பேச்சுக்கள் அடிபட்டன.

அவருடைய சகோதரர் டட்லி சேனநாயக்காவின் தலைமையில் உள்ள யு. என். பி. யில் மறுபடியும் அவர் சேருவதற்கு இதுவரை தடையாக இருந்து வருவது, அக்கட்சியில் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன இருப்பதுதான. திரு. ஜே. ஆர். ஜெயவர்தன, ஆர். ஜி. சேனநாயக்காவின் பரம வைரி என்பது உலகப் பிரசித்தம். ஒருவருக்கு மற்றவரைக் கண்ணில் காட்டக்கூடாது. 1956 தேர்தலில் திரு. ஆர். ஜி. தமது தம்பதெனியா ஆசனத்தை நிலைநாட்டியதுடன் களனித் தொகுதியில் ஜே. ஆரைத் தோற்கடித்து மண்கவ்வச் செய்ததை சீக்கிரத்தில் எவரும் மறந்துவிட முடியாது.

இவர்கள் இருவருக்கு மிடையிலான பகைமை உணர்ச்சி ஏதோ தனிப்பட்ட விவகாரங்களால் ஏற்பட்டதென்ற போதிலும் அரசியல் மட்டத்துக்கு அது வளர்ந்துவிட்டது. இவர்கள் இருவரும் கிழவர் டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் இருந்த காலத்தில் சீனாவுடனான ரப்பர் — அரிசி ஒப்பந்த விஷயத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொண்டனர்.

ஆர். ஜி. திரும்பவும் யு. என். பிக்குள் நுழைவதானால் ஜே. ஆர். அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். இதுவொன்றே அவருடைய நிபந்தனை. ஜே. ஆர். யு. என். பி-யில் இருப்பதுதான் ஆர். ஜி. அதற்குள் நுழைவதற்கு இருந்து வரும் ஒரே ஒரு தடையாகும்.

ஜே. ஆருடன் டட்லிக்கு மனக்கசப்பு ஏற்பட்டதிலிருந்து சேனநாயக்கா குடும்பத்தினர் ஜே. ஆரை எங்கேயாவது ஐ. நா. சபையிலோ அல்லது ஐ. நா. வின் வர்த்தக அபிவிருத்தி மாநாட்டிலோ ஓர் உயர் பதவிக்குத் தள்ளி விட்டு சகோதரர் ஆர். ஜியை மறுப்படியும் யு. என். பி க்குள் இழுத்தெடுப்பதற்குப் பலவித முயற்சிகள் எடுக்கின்றனர்.

இத்திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை அடைந்து விட்டதாகவும். சமீபத்தில் டட்லியின் சகோதரர் றொபட் சேனநாயக்காவின் வீட்டில் இதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாகவும் தெரிகிறது. ஜே. ஆர். ஜப்பானுக்குச் சென்று திரும்பிய பின்னர், இவ்வருடம் செப்டம்பர்—நவம்பருக்குள் அவர் யு. என். பி யை விட்டு வெளியேறுவார் எனவும், அதன் பின்பு ஆர். ஜி. திரும்பவும் தமது இனத்தவருடன் சேர்ந்து விடுவாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆர். ஜியை யு. என். பி-யின் துணைத் தலைவராக நியமிப்பதே இவர்களின் திட்டம்.

இத்திட்டம் உண்மையில் நிறைவேறினால் தமிழரசு கட்சிக்குக் கல்தா கொடுத்துவிட்டு, முக்கூட்டு முன்னணியின் வகுப்புவாதப் போர்க் குரலைத் தாம் எழுப்பிக்கொண்டு உண்மையான சிங்கள ''வீரர்களாக'' பொதுத் தேர்தலுக்கு யு. என். பி. செல்லுமென சில அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அரசியல் சந்தர்ப்பவாதத்திற்கு எல்லைதான் ஏது, வரம்புதான் ஏது?

# பத்து மாதமாய் எங்கே சென்றீர்?

## அமிர்தலிங்கத்திடம் கேள்வி

திருடுவதை வழக்கமாகக் கொண்டவன் என கூறப்படும் பேர்வழி ஒருவன் அண்மையில் வலிகாமம் மேற்கில் நடந்த ஒரு கல்யாண வீட்டிலும் தன் கைவரிசையைக் காட்ட முயன்றபோது கையும் களவுமாகப் பிடிபட்டும் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டான் என்று தெரியவருகிறது.

இவனைப் பிணை எடுப்பதற்காக தமிழரசு தளர்பதி திரு. அமிர்தலிங்கம் சங்கானைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதாகவும். அப்போது அங்குள்ள பொலிஸ் அதிகாரி ''இப்போதுதான் வந்தீரோ! பத்து மாதமாய் எங்கு போயிருந்தீர்?'' என்று கேட்டு பிணையும் கொடுக்க மறுத்ததாகவும் தெரியவருகிறது.

கடந்த 10 மாத காலமாக சங்கானைப் பகுதியில் நடந்த சாதிக் கலவரங்களால் மக்கள் பாதிக்கப்பட்ட வேளையில்—குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி வெறியர்களின் சண்டித்தனத்தாலும், அட்டகாசத்தாலும் இம்சிக்கப்பட்டு, அவதிப்பட்டபோது— உயிர்கள் பறிக்கப்பட்டு பொருட்கள் நாசமாக்கப்பட்டபோது—அத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு. அமிர்தலிங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் சற்றும் அக்கறை காட்டாது— அப் பக்கம் தலை கூடக்காட்டாது இருந்துவிட்டு கள்ளன் என்று கூறப்படும் ஒருவனைப் பிணை எடுப்பதற்காக மட்டும் பொலிஸ் நிலையத்தில் தரிசனம் தந்திருக்கிறார்! பொலிஸ் அதிகாரி கூட குத்திக்காட்டும் அளவுக்கு தளர்பதியாரின் 'தலைமறைவு' இருந்திருக்கிறது.

இதிலிருந்து, இந்த தமிழரசு எம். பி. க்களின் ''சேவை'' எவ்வளவுக்கு இருந்து வருகிறது, எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதுமக்களுக்கு நன்கு விளங்குமல்லவா?


உழைக்கும் மக்களின் உரிமைக் குரல்!
பாட்டாளி மக்களின் புரட்சி ஏடு!

தொழிலாளி

வாரப் பத்திரிகை சந்தாதாராகுங்கள்

சந்தா விபரம்:-
1 வருடம் 10-00
6 மாதம் 5-00
3 மாதம் 2-50

சங்கானைச் சாதி வெறியர்

# சண்டிலிப்பாயில் அட்டகாசம்

## நான்கு வீடுகள் தீக்கிரை ஒருவர் வெந்து மரணம்

கடந்த வாரம், சங்கானைச் சாதி வெறியர் கூட்டம் தனது அநாகரிகமான வெறித்தனத்தை சங்கானைப் பகுதி மக்களிடம் காட்ட முதுகெலும்பற்று அயல் கிராமமான சண்டிலிப்பாயில் ஒன்று மறியாத அப்பாவி மக்களிடம் காட்டியுள்ளது. இக்காடைக் கூட்டத்தின் கழிசடைச் செயலால் நான்கு தாழ்த்தப்பட்ட குடும்பங்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இத் தீ வைப்புச் சம்பவத்தால் ஒருவர் வீட்டுக்குள்ளேயே தீயினால் கருகி மாண்டார். இவரது மரணத்தை மல்லாகம் மாஜிஸ்ட்ரேட் கொலை என தீர்ப்பளித்துள்ளார். இவற்றையெல்லாம் செய்ததாகப் பொலிஸாரால் சந்தேகிக்கப்பட்டுத் தேடப்படுபவர்கள் சங்கானைச் சாதி வெறிக் கும்பலைச் சேர்ந்தவர்களேயாகும்.

சங்கானையிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களிடம் தமது கைவரிசைகள் செல்லாது தோல்வி மேல் தோல்வி கண்டு வருவதைப் பொறுக்க முடியாத இக் கழிசடைக் கும்பல் தனது காடைத்தனத்தை ஒன்று மறியாத மக்களிடம் காட்டி, அவர்களின் வீடுகளைத் தீக்கிரையாக்கியும், பொருட்களைச் சேதப்படுத்தியும், ஓர் உயிரைக் குடித்தும், இன்னும் பலருக்கு படுகாயங்கள் விளைவித்தும் உள்ளது.

உண்மையில், சங்கானை சாதி வெறியர்கள் இறுதி அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு, மேலும் மேலும் மக்களை ஆத்திரம் ஊட்டியும், போராடும் இடங்களை விஸ்தரிக்கும் வேலையைத் துரிதப்படுத்தியும் வருகிறார்கள் இச்சாதிவெறியர்கள் சங்கானை மக்களிடம் மூக்குடைபட்ட இம் மூர்க்கர்கள் சண்டிலிப்பாயிலும் மூக்குடைபடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இச் சம்பவம் நடைபெறும் எனஎதிர்பார்த்து அப்பகுதிமக்கள் இரு பெரும் தமிழரசு கட்சி எம். பி.க்களிடம் (தளர்பதி அமிர்தலிங்கம் அப்பாவி தர்மலிங்கம்) முன் கூட்டியே அறிவித்தது மாத்திரமல்ல, தமக்குப் பொலிஸ் பாதுகாப்பும் தரவேண்டும் என கேட்டிருந்தனர். ஆனால், இவ்விரு கனவான்களும் பொலிஸ் மூலமோ, அல்லது வேறு எந்த வகையிலோ ஒரு விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதை நாம் சொல்லவில்லை. வட பகுதி பொலிஸ் உயர்தர அதிகாரியே வீரகேசரியில் வெளியிட்டுள்ள கருத்தில் இரு எம் பிக்களும் முன் கூட்டியே அறிவித்திருந்தால் வீடுகளையும் அம்மக்களையும் காப்பாற்றியிருக்க முடியும் என்று கூறியுள்ளார். இதிலிருந்து தளர்பதி கூட்டத்தாரின் நிலையை ஒடுக்கப்பட்ட மக்கள் முற்றாக அறியக் கூடியதாயுள்ளது.

எவ்வளவுதான் அட்டூழியங்கள் செய்தாலும் அதற்குத் தலைவணங்காது இறுதி வரை மக்கள் போராடியே தீருவார்கள். அப்போராட்டத்தில் சாதி வெறியர்களும் அவர்களின் பக்கத்தில் நிற்கும் கழிசடைகளும் மூழ்கடிக்கப்படுவார்கள் என்பது மட்டும் உண்மை.

# ஆட்சியின் மற்றொரு இரட்டை வேடம்

ஒருபுறம் அரசாங்க இலாக்காக்கள்; மறுபுறம் அரசாங்க கூட்டுத்தாபனங்கள். ஆட்சி நாடகத்தில் அரசாங்கம் போடும் சிறந்த இரட்டை வேடங்களில் இவையாவும் ஒன்று.

அரசாங்க பொது மராமத்து இலாகாவின் வேலைகளைத் திறம்படச் செய்வதற்கென அரசாங்க என்ஜினீயரிங் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. நீர்ப்பாசன இலாகா—நதிப் பள்ளத்தாக்கு சபை, கடற்தொழில் இலாகா—கடல் தொழில் கூட்டுத்தாபனம், காட்டிலாகா—மரக் கூட்டுத்தாபனம், அரசாங்க அச்சக இலாகா—அச்சகக் கூட்டுத்தாபனம். இப்படிப் பல இரட்டை வேடங்கள்.

ஒரு வேலையை ஏன் இரண்டு நிறுவனங்கள் செய்கின்றன.? யு. என். பி. தனது ஆட்களுக்கு வேலை வாய்ப்பை உண்டு பண்ணுகிறதென்பர். இதற்கான விநோத விளக்கமொன்றை பழைய ட்ரொட்ஸ்கிய மேதையும் இன்றைய யு. என். பி. யின் அடிவருடியுமான பிலிப்பையா கூறினர். தோல் கூட்டுத்தாபனக் கட்டடமொன்றுக்கு அடிக்கல் நாட்டும்போது இவர் கூறியதாவது;- ''அரசாங்கத்தின் நிதிச் சட்டங்களும், பரிபாலனச் சட்டங்களும் அரசாங்க வேலைகளின் முன்னேற்றத்திற்குக் குந்தகம் விளைவிக்கின்றன. இதற்காகவே நாம் கூட்டுத்தாபனங்களை நிறுவுகின்றோம். இவை நிதி பரிபாலனச் சட்டங்களின் முட்டுக்கட்டையின்றி சிறப்பாக இயங்க முடியும்'' அதாவது பிலிப்பையாவின் பொன்னான மூளையின்படி முட்டுக்கட்டைகளின் அடிப்படையான வெள்ளைக்கார ஆட்சிகால (கொலோனியல்) சட்டங்கள் சாகாமல் ஒருபுறம் இருக்க, அவற்றைத் தொடாமல், வேறு வழிகளில் முன்னேறலாம் என நம்மைப் பேய்க் காட்டுகின்றார்.

அம்மாவின் கூட்டணித் தலைமையில் ''சேவை'' புரியும் என். எம். பெரேராவின் பொன் மூளையும் இவ்வாறே சிந்திப்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். டட்லிக்குப் பிலிப்பையா, அம்மாவிற்கு என். எம்.

ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் மிண்டு கொடுக்கும் இரு கூட்டணிகளும் ஒரு பாட்டையே வேறு இராகங்களில் பாடுகின்றன.

# ஓவசியர் முறை போனால் கங்காணி முறை வரலாம்

### முதலாளித்துவத்தின் கீழ் எல்லாம் ஒன்றுதான்

மராமத்து இலாக்காவில் உள்ள ஓவசியர் முறை வெள்ளையர்கள் ஆண்ட போது அவர்களால் புகுத்தப்பட்டதாகும். மராமத்து இலாக்காவில் உள்ள சகல ஊழல்களுக்கும் சீர்கேடுகளுக்கும் இந்த ஓவசியர் முறையும் ஒரு முக்கிய காரணம்,

ஓவசியர்மார் ஏனைய அரசாங்க ஊழியர்களைப் போல் சம்பளம் பெறுபவர்கள்தான் ஆயினும், மராமத்து இலாகாவின் நிர்மாண வேலைகள் இவர்களின் கையில் கொந்தாரத்தாக விடப்படுகிறது. குறைந்த செலவில் போலி வேலை செய்து மிகுந்த லாபம் திரட்டுதலே இவர்களின் குறிக்கோள். தமது இலாபத்துக்குக் குந்தகம் விளைவிக்காமல் இருக்கும் பொருட்டு என்ஜினியர் முதல் சாதாரண பியோன் வரைக்கும் ஓவசியர்மார் கைலஞ்சம் கொடுப்பார்கள்.

பொதுமக்களின் வரிப் பணம் இவ்வாறு பறிபோவதைக் கண்டு பலரும் அவ்வப்போது ஓவசியர் முறையைக் கண்டனம் செய்துள்ளனர். ஏன் மந்திரிகளும் அவ்வப்போது பாராளுமன்றத்திலும் வெளியிலும் இது பற்றிப் புலம்பத் தவறவில்லை. ஆயினும் ஏதாவது மாற்றம் நடந்ததா? இல்லை! இரண்டு வருடங்களுக்கு முன்பும், மிகச் சமீபத்திலும் பகிரங்க என்ஜினியர்மார் சங்கம் ஓவசியர் முறையை ஒழித்து விட்டு மாரமத்து இலாகாவில் உள்ள தொழிலாளர்களைக் கொண்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதில் வேடிக்கை என்னவெனில், ஓவசியர் முறையால் தாங்கள் கொழுத்த பணக்காரர்கள் ஆகலாம் என்ற ஆசையில் மோகங்கொண்ட என்ஜினியர்களும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்களாம்.

இதில் தான் மிகப் பெரும் அரசியல் தத்துவம் பொதிந்துள்ளது; என்னதான் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அவை நடைமுறைக்கு வராமல் முட்டுக்கட்டை போடுவது எப்படி என்பது அவர்களுக்குத் தெரியும். பாராளுமன்றம் போன்ற நிறுவனங்கள் என்னதான் வாய்ச் சட்டங்களை நிறைவேற்றினாலும் அவற்றை நடைமுறைப் படுத்தும் அதிகார யந்திரம் தனது முதலாளி வர்க்க நலனுக்கு எதிராகச் செயல்படாது எனும் மெய்யான தத்துவத்திற்கு இதுவும் ஓர் உதாரணம். அண்மையில் நடந்த என்ஜினியர் சங்கக் கூட்டம் ஒன்றில் ஒரு என்ஜினியர் பின்வருமாறு கூறினாராம். ''எமது இலாகா பற்றி மந்திரிகள் பொதுமேடைகளில் நின்று குற்றஞ் சாட்டுவதையும். பொது மக்கள் குறை கூறுவதையும், குற்றமற்ற அப்பாவி ஊழியர்களுக்குத் தண்டனையாக இடமாற்றம் கொடுப்பதையு கண்டு நாம் குமுறுவதில் என்ன பயன்? இதற்கான அடிப்படைக் காரணத்தை நாம் கண்டறிய வேண்டாமா? அது தான் ஓவசியர் முறை.''

ஒரு சில என்ஜினியர்களேனும் இவ்வாறு சிந்திப்பது நல்லதே. அவர்கள் இன்னும் ஆழமாக, தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும் என பொது மக்கள் விரும்புகின்றனர்; ஓவசியர் முறை போனால் இன்னொரு 'கங்காணி' முறை வரலாம். எவ்வாறாயினும் முதலாளி வர்க்க நலனைப் பாதுகாக்கும் வகையில் ஓர் அமைப்பு இருக்குமேயன்றி பொது மராமத்து வேலைகள் நாட்டுக்கேற்ற சிறப்பாக அமைய இன்றுள்ள நிலையில் வழி பிறக்காது!

**பிரதான இரு கோட்பாடுகள்**

எமக்கு வெகுஜனங்கள் மேல் நம்பிக்கை இருக்க வேண்டும். கட்சியின் மேலும் நம்பிக்கை இருக்க வேண்டும். இவை பிரதானமான இரு கோட்பாடுகள். நாம் இக் கோட்பாடுகளின் சந்தேகப் படுவோமானால் நாம் எதையும் சாதிக்க மாட்டோம்.

-மாஓ

வாசியுங்கள்
**RED FLAG**
ஆங்கிலவார ஏடு
விலை சதம் 15
விபரங்களுக்கு:-
121, யூனியன் பிளேஸ்

நம்மைச் சுற்றி

நவம்

# கச்ச தீவில் பாராளுமன்றம்

பஸ்ஸில் நண்பர் ஒருவரோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். காலிமுகத்துக்குக்கிட்ட பஸ் வந்ததும் நண்பர் திடீரென்று சொன்ஞர் ''இந்த சனியன் பிடித்த பாராளுமன்றத்தை கச்ச தீவுக்குத்தான் மாற்றவேணும்'' என்று. நான் ஒரு கணம் அயர்ந்து போனேன். என்னவென்று கேட்டேன். கையைத் தூக்கிச் சுட்டிக்காட்டிஞர். வீதியைத் தடை செய்து முட்கம்பிகள் போடப்பட்டிருந்தன. ஆயுதம் தரித்த பொலிஸார் காவலுக்கு நின்றனர். விஷயத்தைப் புரிந்து கொண்டேன் மாவட்ட சபை வெள்ளையறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதையடுத்து பாராளுமன்றத்தைச் சுற்றி ஆர்ப்பாட்டம் நடத்த கூட்டணிக் கட்சியினர் திட்டமிட்டிருந்தார்கள். அத்தகைய ஆர்ப்பாட்டத்தைத் தடுப்பதற்காகப் பாராளுமன்றத்தைச் சுற்றி சுமார் ஒரு மைல் தூரம் வரை சகல வீதிகளும் முட்கம்பிகளால் தடைப்படுத்தப்பட்டு ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் காவலும் போடப்பட்டது. இன்று இது எழுதும்வரை முட்கம்பிகளும் ஆயுதப் பொலிஸாரும் பாராளுமன்றத்தைச் சுற்றி நிற்கின்றனர். நண்பர் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். கந்தோருக்குக் காலையில் நேரத்துக்குப் போகவேண்டுமென்ற தவிப்பு அவருக்கு. பஸ் அசைந்த பாடாக இல்லை. வீதிகள் தடைப்பட்டதால் எல்லா பஸ்களும் ஒரேவழியில் போகவேண்டும். ஒரேநெருக்கடி. ''பாராளுமன்றத்தைக் கச்சை தீவுக்கு மாற்றி விட்டால் இந்தப் போக்குவரத்து நெருக்கடி வராது என்று தானே சொல்கிறீர்'' என்று நண்பரைப் புரிந்துகொண்டது மாதிரிக் கேட்டேன். நண்பர் சொன்ஞர், ''அதுவும் சரிதான். ஆஞல் இன்னுமொன்று. கச்சை தீவில் என்ருல் பாராளுமன்றம் மிகவும் 'பாதுகாப்பாய்' இருக்கும். ஆட்கள் இல்லாத இடம். எதுவித ஆர்ப்பாட்டமும் நடக்காது. முட்கம்பிகளும் தேவையில்லை. நிரந்தர அரணுக கடல் இருக்கு''

நண்பர் சொன்னதில் விஷயமிருந்தது. பாராளுமன்றம் எப்பவோ ஒரு காலத்தில் மக்களின் கோபத்தில் இருந்து தப்பமுடியாமல் இருக்கும். மக்கள் கிளர்ந்தெழும்போது பாராளுமன்றத்தைப் 'பாதுகாப்பது' கடினம். ஆகவே அதற்கொரு அரண் தேவை. முட்கம்பிகளும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் இதற்காகத்தான் ''உண்மையான அதிகாரம் பாராளுமன்றத்தில் அல்ல, ஆயுதம் தரித்த பொலிசாரிடமும் இராணுவத்திடமும்தான் இருக்கிறது என்பதற்கு இதைவிடத் தகுந்த சாட்சி வேறில்லை'' என நண்பருக்குச் சொன்னேன்.

''அதுசரி எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டம் நடக்காமல் போய்விட்டதே ஏன்?'' என்ருர். ''பொலிஸ் அனுமதி வழங்கவில்லை போலிருக்கிறது. லைசென்ஸ் பெற்றுத் தானே எதையும் செய்பவர்கள் அவர்கள். கெனமனும் என். எம். பெரேராவும் இப்படிப்பட்டவர்கள் தாமே'' என்றேன்.

★

## மூளையற்ற கட்சி?

திருவாளர் வி. நவரத்தினம் தமிழரசு அபேட்சகராக ஊர்காவாகற்றுறை இடைத் தேர்தலில் போட்டியிட்டபோதும், பின்னர் நடந்த பொதுத்தேர்தலின் போதும் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் அவர்களது தப்பட்டை சுதந்திரனும் திரு. நவரத்தினத்தைத் தமிழரசுக் கட்சியின் மூளை என வருணித்தார்கள். அவர் ஒரு திறமை வாய்ந்த புரக்டர் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே அத்தகைய திறமை சாலியை தீவுப் பகுதி மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தேர்தல் பிரசாரம் செய்யப்பட்டது. தேர்தல் முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழரசுக் கட்சி கணவன் மனைவி உறவும் பூண்டது. ''கணவன் மனைவி உறவுக்குக் காரணம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறும் நோக்கமல்ல; முதலாளித்துவத்தைக் காப்பது தான்'' என்று நாம் அப்போதே கூறிஞேம். மூன்று வருடங்கள் கழித்து அடையாள அட்டை மசோதா சமர்ப்பிக்கட்ட பிறகே இந்த விஷயம் 'மூளை'க்கு விளங்கியது. தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் நலனை ஐக்கிய தேசியக் கட்சிக்கு விற்றுத் துரோகம் செய்து விட்டது என காலம் கடந்து கண்டு கண்டு பிடித்தது 'மூளை' இன்று 'மூளை' கட்சியில் இல்லை, அடையாள அட்டை மசோதாவை எதிர்த்தபடியால் தமிழரசுக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். இனி தமிழரசுக் கட்சிக்கு 'மூளை' சப்ளை செய்வது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. 'தந்தைக்கு' வயது முதிர்ந்து வாக்குத் தடுமாற்றமும் ஏற்பட்டுவிட்டது. 'இரும்பு மனிதன்' நாகநாதனே உருகிப்போய்விட்டார். மாரடைப்பு அடிக்கடி வருகிறது. மார்ட்டினே விசேஷ குத்தகை முறையில் விவசாயம் செய்ய முயற்சிப்பதாய்க் கேள்வி. மாவட்டசபைகளுக்கு கிடைக்கவிருக்கும் அதிகாரங்கள் பற்றி வெள்ளையறிக்கை கூறுவது திருச் செல்வத்தின் மூளைக்கு வேலையில்லாமல்

## மாவட்ட சபை ஒரு மாய வலை
## மக்களை ஏமாற்ற தந்திரவேலை

ஆக்கி விட்டது. தளர்பதி அமிர்தலிங்கமோ மூளையில்லாமல் கணவன் மனைவி உறவு பற்றிப் பேசி எக்க சக்கமாக மாட்டிக் தொண்டார். 'அப்போ தமிழரசுக் கட்சி மூளையற்ற கட்சியா? ஆசியா பவுண்டேசனும் கத்தோலிக்கத் தலைமைப்பீடமும் இருக்கே மூளை வழங்க' என்று வாசகர்கள் நினைப்பது எனக்கும் புரிகிறது.

★

## கள்ள உறவு

இம்மாதம் 7-ந் திகதி திரிபுவாத முக்கிய பிரமுகர் (அமைப்புக் காரியதரிசி) கே. பி. சில்வா காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவின் வீட்டுக்கு மதியச் சாப்பாட்டுக்குச் சென்றிருந்தாரென்றுஅறியக்கிடக்கிறது. கூட்டரசாங்கம் வீழ்ச்சியடையக் காரணமாயிருந்த சி. பி. டி, சில்வாவுடன் திரிபுவாதி சில்வாவுக்கு என்ன தொடர்பு? பகிரங்கமாக அரசியல் எதிரிகளாக நடிப்பவர்கள், தனிப்பட்ட முறையில் நண்பர்களாக ஆலிங்கனம் செய்து கொள்வார்கள். இது பாராளுமன்ற சம்பிரதாயம் ஆயிற்றே. சோவியத் திரிபுவாதத் தூதுவர் செத்துப் போன அமெரிக்கச் செனட்டர் ருெபட் கென்னடியின் உடலுக்குப் பந்தம் (மெழுகுதிரி) பிடித்தாரம். ஏகாதிபத்தியத்துக்குப் பந்தம் பிடிப்பது தானே அவர்களது வேலை? உள்நாட்டுத் திரிபுவாதிகள் உள்நாட்டு ஆளும் வர்க்கத்துடன் உறவாடுவதில் வியப்பில்லை. குருவை மிஞ்சிய சிஷ்யர்கள்! இல்லாவிட்டால் மாவட்ட சபை வெள்ளையறிக்கைக்கு முழு எதிர்ப்பையும் தெரிவிக்கவேண்டும் என்று கூட்டணிக் கட்சியினர் மும்முரமாக இருந்த ஜூன் 7ந் திகதி வேளையில், திரிபுவாதிக்கு மந்திரி வீடு செல்ல நேரம் கிடைத்ததா?

இன்னெரு திரிபுவாதியான டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்க மாவட்டசபை நடைமுறைக்கு வந்தால் சிறுபான்மை இனமான சிங்களவர்களை நசுக்கிவிடுவார்கள் என்று ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார். டாக்டரின் கருத்துப்படி சிங்கள மக்களின் பரம எதிரி தமிழர்களாகும். அதாவது சிங்கள தொழிலாள– விவசாயிகளுக்கு தமிழ் தொழிலாள-–விவசாயிகள் எதிரிகளாவர். பாவம் திரிபுவாதியான பின் டாக்டர் தனது மார்க்சிஸத்தை மறந்து போஞர். வடக்கே இவர்களுக்கு இருக்கும் ஒன்றிரண்டு பெட்டி தூக்கிகள் என்ன சொல்வார்களோ?

சமயத்துக் கேற்ப பல்டியடிக்கும் திரிபுவாதத் தலைவர் இறுதியாக மாவட்டசபை மசோதா இலங்கையில் தமிழரையும் சிங்களவரையும் பிரிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் கொண்டு வந்த சூழ்ச்சி என்ருர். பிரித்து ஆளும் தந்திரம் ஏகாதிபத்திய வாதிகளின் சொத்து. அவர்களுடைய குணம், இயல்பு ஒரு போதும் மாருதென்ருர். திரிபுவாதப் பொதுக்காரியதரிசி பீட்டர் கெனமனே ஒரு படி மேலே போகின்ருர். அமெரிக்காவின் பிற்போக்குவாதிகள், சிறிது தாராளக் கொள்கையுடையவர்களையே விட்டுவைக்க மாட்டார்கள்' என்பதை ருெபட் கெனடியின் கொலை காட்டுகிறது என்று கெனமன் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். ஏகாதிபத்தியத்தின் குணம் அப்படித்தான். ஒரு போதுமே மாருது என்ருர்.

நல்லது, கெனமனுக்கும் விக்கிரம சிங்காவுக்கும் ஒரு சிறிய கேள்வி'' ஏகாதிபத்தியத்தின் இயல்பு ஆக்கிரமிப்புத் தன்மை அது ஒரு போதும் மாருது.''என்று சீனத் தோழர்கள் கூறியபோது'' ஏகாதிபத்தின் இயல்பு மாறிவிட்டது, அதனுடைய இன்றைய தலைவர்கள் சிந்திக்கக் கூடிய புத்திசாலிகள். ஆகவே அவர்களோடு சமாதான சகவாழ்வு நடத்துவோம்'' என்று கூறியவர்கள் உங்கள் குருநாதரான குருஷ்சேவும், கொசிஜின் பிரஷ்னெவ் கும்பலும் அல்லவா? என்ன முன்னுக்கு பின் முரணய் உளறுகிறீர்களே? திரிபுவாதிகளின் இயல்பும் ஒரு போதும் மாருதுதான்! திரிபுவாதம் என்பது சந்தர்ப்பவாதம் என்று கூறியவர் மாமேதை லெனின் அல்லவா?

## சிறந்த தோழர்

வேலை என்பது என்ன? வேலை போராட்டமே. அந்த இடங்களில் நாம் கடப்பதற்கும் தீர்ப்பதற்குமே கஷ்டங்களும் பிரச்சினைகளும் உள்ளன. இந்தக் கஷ்டங்களைக் கடக்க வேலை செய்யவும் போராடவும் நாம் அங்கு செல்கின்ருேம். எங்கு கஷ்டங்கள் பெரிதாயுள்ளனவோ அங்கு செல்ல அதிக ஆவல் கொண்டவரே சிறந்த தோழர்.

-மா சே-துங்


## மாஓவின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | சிறையில் செங்கொடி அதிகாரம் நிலைத்திருக்க முடிவது ஏன் | -/25 சதம் |
| 2 | சீன சமுதாயத்திலுள்ள வர்க்கங்களின் ஆராய்வு | -/35 சதம் |
| 3 | நடைமுறை பற்றி | -/40 சதம் |
| 4 | தலைமை பற்றி | -/20 சதம் |
| 5 | ஐக்கிய முன்னணிக்குள் தனித்துவம் | -/20 சதம் |
| 6 | மாஓவின் மேற்கோள்கள் | 1. 75 சதம் |
| 7 | வாலிபர் இயக்கம் | -/20 சதம் |
| 9 | இலக்கியத்தையும் கலையையும் பற்றிய யெனுன் கருத்தரங்கில் உரைகள் | -/75 சதம் |

தபால் செலவு தனி

தொழிலாளி பிரசுராலயம்
102, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.

## உலக வலம்

★

உஸ்மான்

# வியட்நாமிலிருந்து விரட்டப்பட்டதும் லாஓஸில் குந்தியிருக்கத் திட்டம்

## லாஓஸில் மற்றொரு வியட்நாம் உருவாகிறது

## அமெரிக்காவில் தினமும் சராசரி பதினறுபேர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்

## சோவியத் யூனியன் கம்யூனிஸ விரோதியான "மலேஷிய" அரசாங்கத்தின் நல்ல நண்பனும்!

பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் கிரஹாம் கிறீன் என்னும் நாவலாசிரியர் அமைதியான அமெரிக்கன் என்ற ஆங்கில நாவலை வெளியிட்டார்; 1954-ம் ஆண்டு டியன் பியன் பூவில் ஏற்பட்ட மாபெரும் தோல்வியைத் தொடர்ந்து பிரஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் வியட்நாமை விட்டு வெளியேற, அவர்களின் இடத்தில் அமெரிக்கர் புகுந்தனர். தொடக்கத்திலே தலைமறைவாகவும் நசுக்கிடாமலுமே அமெரிக்க "ஆலோசகர்கள்" அமைதியான முறையில் தமது சூழ்ச்சிகளையும் நாசகார வேலைகளையும் செய்து வந்தனர். ஆயினும் அமெரிக்க "ஆலோசகர்களை" இனங் கண்டுகொண்ட வியட்நாம் தேசபக்தர்கள் அடிக்கு அடி என்று எதிர்த்து வந்தனர். இந்தப் பின்னணியை வைத்து எழுதப்பட்ட ஓரளவு முற்போக்கு நாவலே அது. ஆசிரியர் கிறீன் சில செய்திகளை அன்று மேற்கத்திய வாசகர்களுக்கு அம்பலப்படுத்தினார் என்றே கூறவேண்டும்.

கிரஹாம் கிறீன் சித்தரித்த "அமைதியான" அமெரிக்கன், உண்மையில் அடாத்தன—அசிங்கமான— அமெரிக்கன் என்னும் உண்மையை இன்று முற்போக்கான அமெரிக்கரே கண்டுணர்ந்து வருகின்றனர்.

சமீப காலத்தில் வியட்நாமின் அண்டை நாடான லாவோஸ் உள்ள நிலைமையையும், அரசரின் "ஆட்சி"க்கு உட்பட்டுள்ள பகுதியில் அமெரிக்கர்களின் நடவடிக்கைகளையும் நோக்கும்போது, கிரஹாம் கிறீன் தீட்டிய அமைதியான அமெரிக்கனின் நினைவே வருகின்றது. தற்சமயம் பாரிஸில் நடக்கும் வியட்நாம் பேச்சுவார்த்தைகளின் பொழுது முழுப் பூசனிக்காயைச் சோற்றுக்குள் மறைப்பது போல, லாவோஸ் ராச்சியத்தில் வியட்நாம் தலையிடக் கூடாது என்று கேட்டது அமெரிக்கா. யார் யாரைக் கேட்பது?

இந் நிலையில் லாவோஸிலுள்ள அமெரிக்கத் தலையீடு பற்றிச் சில அமெரிக்க எழுத்தாளரே கூறியுள்ள தகவல்களை உற்று நோக்குவது உண்மையைத் தெளிவாக்க உதவும். வியட்நாமில் அமெரிக்கரது ஆக்கிரமிப்பும் அநாகரீகச் செயல்களுமே பெரும்பாலான உலக மக்களது கவனத்தை ஈர்த்துள்ளது; ஆனால் லாவோஸில் மற்றொரு வியட்நாம் உருவாகிக் கொண்டிருப்பதைப் பலர் கவனிப்பதில்லை. ஒரு சின்ன உதாரணங் காட்டலாம்—சென்ற கோடை காலத்தில் மாத்திரம் லாவோஸிய தேச பக்த ஆயுதப்படைகள் நூற்றொரு அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்தி அல்லது விமான நிலையங்களிலேயே சேதப்படுத்தியிருக்கின்றன; அதே காலப் பகுதியில் லுவாங் பிரபாங் மாகாணத்திலே ஏறத்தாழ ஆயிரத்து நானூறு பலரகத் துப்பாக்கிகளை தேசபக்தப் படைகள் கைப்பற்றியுள்ளன; இத்தகைய ஆயுதங்கள் அமெரிக்காவால் வழங்கப்பட்டவை. இனி அமெரிக்க எழுத்தாளர்கள் பட்டும் படாமலும் கூறுவதைப் பார்ப்போம்.

உலகிலுள்ள பெரிய நாடுகள் யாவும் பிறநாடுகளிலுள்ள தத்தம் தூதராலயங்களில் இராணுவ (முப்படை) அவதானிகளை வைத்திருப்பதுண்டு. அதாவது தூதுவருக்கு அரசியல், பொருளாதாரம, கலாச்சாரம் ஆகிய துறைகளிலே யோசனைக் கூற காரியதரிசிகள் இருப்பதுபோல இராணுவ விஷயங்களுக்கும் காரியதரிசிகள் உண்டு. லாவோஸ் ராச்சியத்தின் தலைநகரான வியந்தியானிலுள்ள அமெரிக்கத் தூதுவன் வில்லியம் சலிவன் என்பவனுக்கு யோசனைக்கூற எழுபத்து இரண்டு (72) இராணுவ அதிகாரிகள் உள்ளனர்! உலகிலுள்ள எந்த ஒரு நாட்டிலும் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக இத்தனை இராணுவ அவதானிகளை வைத்திருக்கவில்லையாம். இராணுவப் படையினர் செய்யவேண்டிய பணிகளை இவர்கள் செய்கின்றனர் என்று ஒரு யங்கி பத்திரிகை கூறுகின்றது. மேலும் சில தகவல்கள் :-

(1) வியந்தியான் நகர ஹோட்டல்களில் இன்று சிவில் உடையணிந்த இராணுவ பாணியில் மயிர் வெட்டிய அமெரிக்கர் நிறைந்து காணப் படுகின்றனர்.

(2) பெயரளவில் இரண்டாயிரம் அமெரிக்க "ஆலோசகர்கள்" இருப்பதாக அமெரிக்கா ஒப்புக்கொள்கிறது. ஆயினும் அது உண்மையின் ஒரு சிறு துளியே என்கிறார் மற்றொரு பத்திரிகை நிருபர்.

(3) லாவோஸிய விமான ஓட்டிகளாகவும், போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், என்ஜினீயர்களாகவும் பூகோளப் படங்கள் தயாரிப்பவர்களாகவும், ரடார் கருவி இயக்குனர்களாகவும், பல்வேறு கேந்திர தொழில்களில் ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்திரண்டு அமெரிக்கர் உள்ளனர்.

(4) அமெரிக்காவின் மாபெரும் நாசகார நிறுவனமான சி. ஐ. ஏ. சார்பில் இரண்டு "பிரைவேட்" விமானக் கம்பனிகள் (ஏயர் அமெரிக்கா, கொன்டினென்டல் ஏயர் செர்விசெஸ்) இராணுவத் தளபாடங்களை பதெற் லாவோ (தேசபக்த) படைகளுக்கு எதிராகத் தூக்கி உதவுகின்றன.

(5) லாவோஸ் இராச்சியத்தின் எழுபதினாயிரம் பேர் கொண்ட படையினை அமெரிக்கரே "மேற்பார்வை" செய்து, அதற்குரிய போர்க் கருவிகளைக் கொடுத்து வருகின்றனர்.

வியட்நாமில் தோல்விகண்டு வெளியேற நேரும்பொழுது, லாவோஸில் குந்திக் கொள்ளலாம் என்பது அமெரிக்கத் திட்டம். எனவேதான் அதிகம் அதிகமாக அமெரிக்காவின் கவனம் இப்பொழுது லாவோஸின் மீதுள்ளது. இதனை விளங்கிக்கொள்ள ஓர் உதாரணம் போதுமானது: அமெரிக்க பாசிஸப் போக்கினைப் பிரதிபலிக்கும் டைம் பத்திரிகையின்படி, சென்ற இரண்டு மாதக் காலத்திலே வடவியட்நாம் மீது வீசப்பட்ட குண்டுகள் அளவு, பதெற்லாவோ படையினர் வசமுள்ள வட லாவோஸ் பகுதிகள் மீது அமெரிக்க விமானங்கள் பொழிந்துள்ளனவாம். லாவோஸில் "அமைதியான" அமெரிக்கன் அசிங்கமானவனாக மாறிவிட்டான். இதன் பிரதி விளைவாகவே லாவோஸில் மக்கள் யுத்தமும் புதிய வேகம் பெற்று வருகின்றது.

◎

கென்னடியின் கொலை பற்றிச் சென்ற வாரம் நாம் எழுதியிருந்தது வாசகர்களுக் நினைவிருக்கும். "முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் மக்கள் மீது பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் அடிப்படையில் அமைந்தவை; இடையிடையே ஆளும் வர்க்கத்தினர் சிலரும் பலாத்காரத்திற்கு ஆளாகின்றனர்." ஐரோப்பாவிலே பழைய நிலமானிய அமைப்புகளின் மிச்ச சொச்சங்களைத் தகர்த்தெறிந்து கொண்டு, முதலாளித்துவம் பிறந்த காலப் பகுதியில் புதிய புதிய மூலப் பொருட்களும் சந்தைகளும் தேவைப் பட்டன. அந்தப் பொழுதிலேயே 'புதிய உலகமாகிய' அமெரிக்கா உருவாக்கப் பட்டது. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த செவ்விந்தியரையும், பிற பூர்வ குடிகளையும் கொன்று குவித்துத் துப்பாக்கிப் பலத்தினால் ஸ்தாபிக்கப் பட்டது அமெரிக்க ஐக்கிய இராச்சியம். தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற தத்துவத்தின் அடிப்படையில் துவக் கெடுத்தவன் துணிந்தவன—தொழிலபிவிருத்திக்கு உரியவன் என்ற முறையில் வளர்ந்ததே முதலாளித்துவம். 'புதிய' முதலாளித்துவ மாகையால் முதலாளித்துவத்தின் அத்தனை அம்சங்களையும் நிறைவாகக்காணலாம் அமெரிக்காவில். அதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் துவக் கேந்தும் சுதந்திரம். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பது நிலப் பிரபுத்துவச் சூழலின் பிரதிபலிப்பான வாசகம்; ஏகபோக உரிமையே இறுதி இலட்சியம் என்பது முதலாளித்துவத்தின் தாரக மந்திரம். உள் நாட்டிலும், குடியேற்ற நாடுகளிலும் பலாத்காரத்தைக் கருவியாகக் கொண்டே "சுதந்திர" பொருளாதார அமைப்பை எழுப்பினர். வளர்த்த கடா மார்பிலே பாய்வது போல, பலாத்காரம் சில சமயங்களில் அதன் எஜமானர் மீதும் திரும்பி விடுகிறது, மதங் கொண்ட யானை இடையிடையே பாகனையுந் தூக்கியெறிந்து நசுக்குவது போல.

சுரண்டலும், அதற்கேதுவான "சுதந்திர" பொருளாதாரக் கட்டுக் கோப்பும், அதன் பிரதிபலிப்பான வர்க்க பேதமுள்ள சமுதாய முறையும் உள்ளவரை பலாத்காரத்தை ஒழித்து விட முடியாது. ஒரு கென்னடிக்கு ஓலமிடுவதில் உண்மையில் அர்த்தமில்லை. அது வாழ்க்கையின் சர்வ சாதாரண நிகழ்ச்சியாயிற்றே. சென்ற ஆண்டில் மாத்திரம் அமெரிக்காவில் ஐயாயிரத்து அறுநூறு பேர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தனர் என்று உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதாவது நாளொன்றுக்குச் சராசரி பதினறு நபர்கள் சுட்டுக் கொல்லப் படுகின்றனர். இவ்வாறு சுடப் படுவோரில் ஒரு மல்கம் எக்ஸ், ஒரு மார்டின் லூதர் கிங், ஒரு கென்னடி. இடம் பெறும் போது அது உலகச் செய்தியாகிறது. ஆனால் கோடிக் கணக்கில் இதுவரை கொல்லப் பட்ட சிகப்பு இந்தியரையும், நீக்ரோக்களையும் பற்றி யார் கணக் கெடுப்பது? வன் செயல் வர்க்க சமுதாயத்தின் உடன் பிறவி; அதைத் தனிப் பட நொந்து பயனில்லை; காரணம் மறையும் பொழுதுதான் காரியமும் இல்லாது போகும்.

—11-ம் பக்கம்பார்க்க

### எதிர்காலத்தை காட்டும் இரண்டு

கம்யூனிஸ்டுகளாகிய நாம் ஒரு போதும் எமது அரசியற் கருத்துக்களை மறைப்பதில்லை. நிச்சயமாகவும், எதுவித சந்தேகத்திற்கிடமின்றியும் எமது எதிர்கால அல்லது மிகக் கூடிய வேலைத் திட்டம் சீனவை சோஷலிஸத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் முன்னெடுத்துச் செல்வதுதான். எமது கட்சியின் பெயர், எமது மார்க்சிஸ உலக நோக்கு இரண்டும் இந்த அதியுயர்ந்த எதிர்கால இலட்சியத்தை— ஒப்புக்கூற முடியாத பிரகாசமும் உன்னதமும் சேர்ந்த எதிர் காலத்தை —ஐயந்திரிபுறக் காட்டுகின்றன.

—மா சே-துங்

''முதலாவது சோஷலிஸ அரசு சோவியத் யூனியன். சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி லெனினுல் உருவாக்கப்பட்டது. சோவியத் கட்சியினதும் அரசினதும் தலைமை திரிபுவாதிகளால் அபகரிக்கப்பட்ட போதிலும் சோவியத் வெகு ஜனங்கள் நல்லவர்கள். கட்சி அங்கத்தவர்களும், ஊழியர்களும் நல்லவர்கள். அவர்கள் புரட்சியை விரும்புபவர்கள். எனவே, திரிபுவாதிகளின் ஆட்சி வெகுகாலம் நிலைத்து நிற்காது என்ற உறுதியுடன் இருக்கும்படி தோழர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்''

—மாசே-துங்

**சோவியத் யூனியனில் உள்ள ஒரு புரட்சிகர ஸ்தாபனமான - குருஷ்சோவிய திரிபுவாதக் கும்பலுக்கு எதிரான ''ஸ்டாலின் குழு'' அண்மையில் மாஓ வினுல் ஆரம்பிக்கப்பட்டு நேரடியாக வழிநடத்திச் செல்லப்படுகின்ற சீனுவின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சார புரட்சியை உணர்வு பூர்வமாக போற்றுகின்ற கட்டுரை ஒன்றை விநியோகித்துள்ளது. இக்கட்டுரை சோவியத் யூனியனில் மறுபடியும் முதலாளித்துவத்தைப் புகுத்துவதற்காக சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலை வன்மையாகக் கண்டிக்கிறது. சீனுவின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சார புரட்சியைக் கேலி செய்வதை எதிர்த்தும் வன்மையாகக் கண்டிக்கிறது.**

# சோவியத் திரிபுவாத நாசகார சக்தி உலகின் பிற்போக்குப் பகுதிகளுடன் ஒன்றுசேர்கிறது

(சென்றவாரத் தொடர்ச்சி)

முதலாவது சோஷலிஸ நாடான சோவியத் யூனியனிலும், வேறுபல நாடுகளிலும் திரிபுவாதிகள் அதிகாரத்தை அபகரித்தபின், சர்வதேச பாட்டாளி வர்க்கத்திற்கும், கம்யூனிஸ இயக்கத்திற்கும் திரிபுவாத துரோகக் கும்பல்களை எதிர்த்துப் போராடும் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினையாகியுள்ளது.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி பற்றிய தோழர் மாஓ சே-துங் முன்வைத்துள்ள கொள்கை, இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வழிகளைக் காட்டியுள்ளதென கட்டுரை வற்புறுத்துகின்றது.

பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி பற்றிய தலைவர் மாஓவின் கொள்கையை விளக்குகையில் கட்டுரை பின்வருவனவற்றை சுட்டிக்காட்டுகின்றது.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி சித்தாந்தத் துறையில் முதலாளி வர்க்கத்திற்கும் அதன ஏஜண்டுகளுக்கும் எதிரான உறுதியான தாக்குதல். அதன் சித்தாந்தத்தை ஒழித்துக் கட்டுவதன் மூலம் முதலாளி வர்க்கத்தை அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஒழித்துக் கட்டுவதை பூரணப்படுத்த அது அறைகூவல் விடுக்கின்றது.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் இறுதி நோக்கம் முதலாளித்துவம் மறுபடி புகுத்தப்படும் சாத்தியக் கூறுகளை ஒழித்துக் கட்டுவது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பாதுகாத்து உறுதிப்படுத்துவது ஆகும்.

## கலாச்சாரப் புரட்சியின் கடமைகள்

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் கடமைகள் அல்லது, இறுதி நோக்கத்தை அடையும் வழி முறைகள் என்பனவற்றை பின்வருமாறு கூறலாம்.

கட்சிக்குள் ஊடுருவியுள்ள சீரழிந்த நபர்களையும், பதவி வேட்டைக்காரர்களையும் அம்பலப்படுத்தி விமர்சித்து, தனிமைப்படுத்துவது, சந்தர்ப்பவசமாக கட்சிக்குள் வந்தவர்களையும் செயலற்ற அங்கத்தவர்களையும் களை பிடுங்குவது.

கட்சி, அரசாங்க ஸ்தாபனங்களை அதிகார வெறியர்கள் இல்லாதவைகளாக்கி மக்களுடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத்துவது.

சித்தாந்த, கலாச்சாரத் துறைகளில் முதலாளித்துவப் போக்குகளை ஒழித்துக் கட்டுவது, முதலாளித்துவச் சிந்தனை, பழக்கங்கள், வழக்கங்கள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவது — அவை வருவதைத் தடைசெய்தல், எமது பாட்டாளி வர்க்க சிந்தனையும், கலாச்சாரமும் மேலும் வளர்ச்சி அடைய உதவி செய்வது சகல இடங்களிலும் உறுதியுடன் மார்க்சிஸ—லெனினிஸத்தைப் பிரச்சாரம் செய்து பரப்புவது.

வெகு ஜனங்களின் அரசியல் நடவடிக்கைகளை கூடியளவு வளர்த்தெடுத்து சகல அரசாங்க அலுவல்களிலும் அவர்களைத் தொடர்ச்சியாகப் பங்கு கொள்ளச் செய்வது.

இப்போராட்டத்தின் ஊடாக உருக்குப் போன்ற, உறுதி குலையாத கம்யூனிஸ்டுகளைக் கொண்ட புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்கி, புரட்சியைக்கொண்டு நடத்த வாலிபர்களைப் பயிற்றுவிப்பது.

இக்கடமைகளை நிறைவேற்றுவது எப்படி? இவற்றை நிறைவேற்றுவதற்கு உபயோகிக்கவேண்டிய முறை யாது? இந்த முறைதான்—பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் முறைதான்—வெ ஜனக் கொள்கையாகும்.

## அரசியல் என்பது தலைவர்களுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல

இப் புரட்சி பொது மக்களைத் தட்டி எழுப்பித் துரிதப்படுத்தியுள்ளது. திரிபுவாதிகளும் ஏனைய துரோகிகளும் மக்களை நம்ப வைக்க நினைத்தது போல், அரசியல் என்பது தலைவர்களுடன் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல என்பதை அது மக்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளது. அரசியல் என்பது மக்கள் அக்கறை கொள்ள வேண்டிய விஷயம். அவர்களுக்குத்தான் அது முக்கியமாகத் தேவை. மக்கள் தாம் துரோகிகளை, சீரழிந்தவர்களை, பதவி வேட்டைக் காரர்களை, தமது எதிரிகளை பூரணமாக அம்பலப்படுத்த முடியும். தலைவர்களில் நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார்—தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் மக்களினதும் நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்பதை கணிப்பிட வேண்டியவர்கள் மக்கள் தாம் என்பதை இப்புரட்சி எடுத்துக் காட்டியுள்ளது தெளிவாகக் கூறினுல், பொல்ஷவிக்குகளின் தலைமையில் வெகுஜனங்கள் மட்டும் தான் முதலாளித்துவக் கொள்கையை வேரோடு பிடுங்கி ஒழித்துக் கட்ட முடியும். மக்களில் நம்பிக்கை வைப்பதன் மூலம்தான்-அவர்களின் செயல்கள் மூலம்தான்-மகத்தான பட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற முடியும்; அதன் நோக்கத்தைப் பெற முடியும்; முதலாளித்துவம் மறுபடி தலை தூக்குவதைத் தடுக்க முடியும்.

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி ஒக்டோபர் புரட்சியின் உலக ரீதியான பாதையின் தொடர்ச்சியேயாகும்; சோஷலிஸப் புரட்சியினதும், சோஷலிஸ நிர்மாணத்தினதும் விதியேயாகும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் உள்ள சகல நாடுகளும் சோஷலிஸப் புரட்சியின் இந்த அம்சத்தை தவிர்க்க முடியாது கடந்து செல்ல வேண்டியிருக்கும்.

சுருங்கக் கூறினுல் மகத்தான பாட்டாளி வர்க்க கலச்சாரப் புரட்சி வர்க்க அடிப்படையில் பொதுவானது, தேசிய உருவத்தில் வேறுபட்டது. ஆனுல், அது மார்க்சிஸ — லெனினிஸத்தின் உலக ரீதியான ஒரு விதியாகும்.

## அவசர அவசியமான கடமை

சீனுவின் உண்மையான நிலையைத் திரித்துக் கூறவும் சீனுவின் மகத்தான கலாச்சாரப் புரட்சியைத் தூற்றவும் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள சோவியத் திரிபுவாத ஆட்சிக் கும்பலின் துரோகங்களை கட்டுரை அம்பலப் படுத்திக் கொண்டிருக்கிறது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: சீனுவில் உண்மையில் நடப்பது என்ன என்பதை அறிய சோவியத் மக்கள் ஆவலாய் இருக்கின்றனர். ஆனுல் உத்தியோக பூர்வமான சோவியத் பிரச்சாரகர்கள் அங்கு உண்மையில் நடப்பதைத் திரித்துக் கூறுவதில் சகல முயற்சிகளையும் எடுத்துள்ளனர். சீனுவைப் பழி சுமத்தும் இயக்கத்தின்போது சோவியத் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ''தமது'' செய்திகளையும், முதலாளித்துவ செய்தி ஸ்தாபனங்களின் செய்திகளையும் பாவித்துள்ளன. இதிலிருந்து சோவியத் பிரச்சார இயந்திரங்களுக்கும், முதலாளித்துவப் பிரச்சார இயந்திரங்களுக்கும் இடையே ஒன்றுபட்ட நோக்கம் இருப்பது நிரூபணமாகிறது. மேலும் முதலாளித்துவப் பத்திரிகைகளின் ''செய்திகள்'' பிராவ்டாவிலும் ஏனைய உத்தியோக பூர்வமான சோவியந் பத்திரிகைகளில் வரும் தீய, கொடிய கட்டுரைகளை விட ''நியாயமானவை'' யகவும் ''சாதாரணமானவையாகவும் காணப்படுகின்றன. இதன் காரணமாக முதலாளித்துவ பிரச்சார இயந்திரங்கள் தமக்குப் பயனுள்ள செய்திகளை—சிறந்த செய்திகளைத் தந்துள்ளதாகப் பெருமைப் படுகின்றன. மக்கள் சீனவினதும், சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியினதும் துரோகிகள் பரப்புகின்ற சீன விரோத அபாண்டங்கள் யாவற்றையும் ஒழுங்காகத் திரட்டித் தருவதாகப் பெருமைப் படுகின்றன. ஆதலால் சீன விரோத அபாண்டங்களை அம்பலப் படுத்துவது லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் விசுவாசமானவர்களின்— சீர்கேட்டுக் கெதிராகப் போராட விரும்புவோரின்—அவசர அவசியமான கடமையாகி உள்ளது.

## சோவியத் திரிபுவாதிகளின் கம்யூனிஸ விரோதப் பிரச்சாரம்

சகல போராட்டங்களும் அரசியல் அதிகாரத்திற்காகவே என்று கட்டுரை மேலும் சுட்டிக் காட்டுகின்றது. இ போராட்டத்தில்—உழைக்கும் மக்களின் இப் போராட்டத்தில்—சீன கம்யூனிஸ்ட் கட்சி முழுவதும் சீன மக்கள் அனைவரும் பங்கு கொள்கின்றனர் என்ற உண்மையை எவராலும் மறுக்க முடியாது. அதாவது சீனுவின் கலாச்சாரப் புரட்சி, தனி நபர்களுக்கிடையிலான சண்டையல்ல; கட்சி முழுவதினதும், மக்கள் அனைவரினதும் நன்மையைக் கருதி நடத்தப்படும் கொள்கைப் போராட்டமாகும்.

கலாச்சாரப் புரட்சி மா சே—துங்கின் தலைமையில் [...] பொல்ஷவிக்குள், கட்சிக்குள்ளிருக்கும் சந்தர்ப்பவாதக் குழுவுக் கெதிராக நடத்துகின்ற ஒழுங்கான போராட்டமாகும்.

மக்களின் பரந்த பகுதியினர் கட்சியுடன் சேர்ந்து

# சோவியத் யூனியனிலும் மகத்த
# பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி அவ

கலாச்சாரப் புரட்சியில் பங்கு பற்றுகின்றனர் என்ருல் அது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கை எள்ளளவும் பாதிக்காது. ஏனெனில், மக்கள் கட்சியின் தலைமையின் ஆணைப்படிதான் நடந்து கொள்கின்றனர். முதலாளித்துவச் சீர்கேட்டிற்கும், சந்தர்ப்ப வாதத்திற்கும் எதிரான போாரட்டத்தில் பங்கு பற்றுவதன் மூலம் மக்கள் பொல்ஷவிசமயப் படுத்தப்படுவர், கட்சியின் மார்க்சீய வாதிகளுடன் அணி திரட்டப்படுவர், கம்யூனிஸ உணர்வு பெற்றவராவர், புரட்சிகர அனுபவம் பெறுவர், கட்சியின் பெழும் ஆதரவாளராய் இருப்பர்.

இப்போராட்டம் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், குருஷ்சோவைப் போன்ற திரிபு வாதிகளுக்கு மிடையிலான தர்க்க ரீதியான—தவிர்க் முடியாத நீண்ட நாள் போராட்டமாகும். சீன கம்யூனிஸ்ட் கட்யின் பொல்ஷவிக்குகளின தலைமையில் வெகுஜனங்கள் சந்தர்ப்பவாதிகளிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றியதை, சோவியத் திரிபுவாத அரசியல் வாதிகள் வெவ்வேறு பிரிவுகளுக் கிடையிலான கோட்பாடற்ற சண்டைகள் என பொய்ப் பிரச்சாரம் செய்துள்ளன. இப்பேர்ப்பட்ட பொய் வதந்திகள் சீன மக்களினதும் சீன சம்யூனிஸ்ட் கட்சியினதும் போராட்டங்களை அவமானப் படுத்தவும், சீன மக்களினதும் சீன கம்யூனிஸ்ட் கட்சியினதும் எதிரிகளை ஆதரிக்கவும் எடுத்துக் கொண்ட முயற்சியாகும். இது வெறும் சீன விரோத, கம்யூனிஸ விரோதப் பிரச்சாரமாகும்.

### உண்மைகளே பதில் அளிக்கும்

''சீன தொழிலாளி வர்க்கம் கலாச்சாரப் புரட்சியை ஆதரிக்க வில்லை'' என்ற சோவியத் திரிபுவாதிகளின் பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப் படுத்திய கட்டுரை, சீன தொழிலாளர்கள் ஸ்தாபனங்களின் நிர்வாகத்தைத் தமது கைக்குள் எடுத்துக் கொண்டனர் என்று கூறுகிறது. கட்சியினதும் அரசாங்கத்தினதும் புதிய தலைமை ஸ்தாபனங்களின் முதுகெலும்பே அவர்கள் தாம்—கலாச்சாரப் புரட்சியின் முன்னனிப் படை அவர்கள் தாம்—என்று கூறுகிறது. இந்த உண்மைகள் மட்டுமே திரிபுவாதிகளின் பொய்ப் பிரச்சாரத்திற்குப் பதில் அளிக்கும்.

சீன வாலிபர்களுக் கெதிராக சோவியத் திரிபுவாதிகள் சுமத்துகின்ற அபாண்டத்தை மறுத்துரைக்கின்ற கட்டுரை, சீன கலாச்சாரப் புரட்சியில் வாலிபர்கள் பங்கு பற்றுவது அவர்களுக்கு மிகவும் முக்கியம் என்று கூறுகிறது. சீன பொல்ஷவிக்குகளான பழைய சந்ததிகளின் வழித் தோன்றல்களாகப் புதிய போராட்டச் சந்ததியினரை வளர்த்தெடுப்பதற்குச் சிறந்த வழி இதுதான். இது கட்சிக்கு வாலிபர்கள் மத்தியில் ஏராளமான நம்பிக்கைக் குரியவர்களை வளர்க்கின்றது.

சீன மக்கள் விடுதலைச் சேனைக்கு எதிராக சோவியத் திரிபுவாதிகள் சுமத்துகின்ற அபாண்டங்களை அம்பலப் படுத்திய கட்டுரை, சீன மக்கள் விடுதலைச் சேனை உண்மையிலேயே சீன கலாச்சாரப் புரட்சியில் பெரும் பங்காற்றுகின்றது என சுட்டிக் காட்டுகிறது.

சீன மக்கள் விடுதலைச் சேனை என்பது என்ன? அது தொழிலாளர்களும் விவசாயிகளும் அடங்கியுள்ள சேனை. வெறுமனே ஆயுதம் தாங்கிய விவசாயிகளும் தொழிலாளர்களும் அல்ல; மிகவும் கட்டுப்பாடுள்ள—மிகவும் அறிவுள்ள—தொழிலாள, விவசாய மக்களின் மத்தியிலுள்ள மிக உன்னதமான கோட்பாடுள்ள பகுதியினராவர்.

### கட்சியின் ஆணைப்படிதான் நடக்கின்றனர்.

சீனுவின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப்

— 8-ம் பக்கம் பார்க்க

## ஜாஸ் மன்னன் கொசிஜின்!

உலகத்தில் ஜாஸ் இசைத் தட்டுகளை சேகரிப்பவர்களுள் கொசிஜின்தான் அதிக ஜாஸ் இசைத் தட்டுகளைச் சேகரித்து வைத்திருக்கின்ருர்.

மன்னன் எப்படியோ மக்களும் அப்படித்தானே! அமெரிக்ககுரல்(வாய்ஸ்ஒவ் அமெரிக்கா) மூலம் சோவியத் யூனியனிலுள்ள 3 கோடி வாலிபர்கள் தினசரி ஜாஸ் இசையை உற்சாகத்துடன் கேட்கின்ருர்கள். அது மட்டுமா?

கடந்த இரண்டு வருடங்களில் லெனின் கிருட்டில் 8 ஜாஸ் கிளப்புகளும் 12 வாலிபர் பாஷன் கபே கிளப்புகளும் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

காம இச்சையைத் தூண்டி வாலிபர்களை நாசகாரப் பாதையில் கொண்டு செல்வதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் இந்த ஜாஸ் இசை பாவிக்கப்படுகின்றது. திரிபுவாத கொசிஜின் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையாள் என்ற வகையில் சோவியத் வாலிபர்களை நாசமாக்குவதில் தனது கடமையை பூரணமாக நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டிருக்கின்ருர்.

# ...கத்தான ... அவசியம்

# உலகப் புரட்சிகர இயக்கத்தில் ஒரு முக்கிய திருப்பு முனை

'பிரான்சில் என்ன நடந்தது'' என்ற கட்டுரையின் சென்ற வாரத் தொடர்ச்சி

இந்நிலையில் இரண்டிலொன்று பார்த்து விடுவதென முடிவெடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய ஆயத்தங்களை அரசாங்கம் செய்தது. மேலதிகமாக 20,000 குழப்பம் அடக்கும் பொலிஸாரைப் பாரிஸில் கொண்டுவந்து குவித்தது. மே மாதம் 16 ந் தேதி மாணவர்கள், சிறுவர்கள், தொழிலாளர்கள் சொபோன் பல்கலைக்கழகத்தைச் சுற்றி வளைத்தனர். இவ்விரவுதான் பின்னர் ''தடைகள் இரவு'' எனப் பெயர் பெற்றது. இப்பிரதேசத்திலிருந்து அங்கு கூடியிருந்தோரை அடித்துத் துரத்துமாறு டிகோல் கட்டளையிட்டார். இக் கட்டளையின் அர்த்தம் குழப்பம் அடக்கும் படையினர் தமது கைவரிசை

இத்தகைய நிலைமையைத் தொழிற்சங்கங்களால் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. திரிபுவாதிகளின் தலைமையில் உள்ள சிஜிரி எனும் தொழிற்சங்க சம்மேளனம் கண்டனம் தெரிவிப்பதற்காக மே மாதம் 13 ந் தேதி வேலை நிறுத்தம் ஒன்றை நடத்த வேண்டும் என்று முடிவெடுத்தது. இதனைத் தொடர்ந்து ஏனைய தொழிற்சங்கங்களும் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்குபற்றுவதற்கான முடிவை எடுத்தன. அன்று நடைபெற்ற வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றியாகும். அன்று நடைபெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ''மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் ஐக்கியப்படுங்கள்'' என்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஊர்வலத்தில் பங்குபற்றிய அநேகர்

அவர்களது அலுவலகத்தில் வைத்து பூட்டப்பட்டனர், அல்லது தொழிற்சாலைகளிலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டனர்.

1 கோடி 40 லட்சம் தொழிலாளர்களின் 1 கோடி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

### எமது அரசியல் நிருபபர்

செய்தமையினுல் பிரான்ஸ் அப்படியே ஸ்தம்பித்துவிட்டது. இந்த இயக்கம் ஒரேயடியாக அடிமட்டத்திலிருந்து வெடித்துக் கிளம்பியது. உத்தியோக ரீயான தொழிற் சங்கங்களின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டது. தொழிற் சங்கங்கள் அவசரப்பட்டுக் கொண்டு தொழிலாளர்களின் போராட்டத்திற்கு உதவி அளித்தன. ஆனுல், அவை வளர்ந்து வந்த இயக்கத்திற்

## பிரான்ஸ் இனி ஒருபோதும் முன்னிருந்த நிலைக்கு திரும்பாது

யைக் காட்ட வேண்டுமென்பதாகும். நிரந்தரப் பொலிஸாரின்மேல் நம்பிக்கை வைத்திருக்க முடியாததினுலேயே இப்படையினர் கொண்டுவரப்பட்டனர்.

### பொலிஸாரின் அட்டுழியம்

மாணவர்களும் தொழிலாளர்களும் தலைகுப்புறக் கவிழ்க்கப்பட்டார்கள். கற்குவியல்கள் மூலம் சொபோனுக்குச் செல்லும் பாதைகளையும் அடைத்தனர். அன்று அதிகாலை சரியாக 2.15 க்கு அங்கு கூடியிருந்தோர் மீது தாக்குதல் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. கண்ணீர்ப் புகை, வியட்நாமில் பாவிப்பதற்கென விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட குளோரின் கலந்த குழப்பம் அடக்கும் கண்ணீர்ப் புகை ஆகியவற்றுடன் குழப்பம் அடக்கும் படையினர் அவ்விடத்திற்குச் சென்றனர்.

அன்று இரவு பொலிஸார் நடத்திய மூர்க்கத்தனமான அட்டூழியங்கள் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஐக்கியத்தைக் கூடுதலாக வளர்க்கக் காரணமாயிருந்தன.

கொண்டு சென்றனர்.

### தொழிலாளர்கள் திரண்டெழுந்தனர்

இச் சந்தர்ப்பத்தில் நிலைமையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள், திரிபுவாதிகள் உட்பட ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்துடன் திருப்திப்பட்டுக் கொண்டனர். அவர்கள் தமது கடமையைச் செய்து விட்டனர். தொழிலாளர்களுடன் தமது ஐக்கியத்தை வெளிப்படுத்தி விட்டனர். தொழிற்சங்கத் தலைவர்களின் நிர்ப்பந்தத்தினுல் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டி ஏற்பட்டது. ஆனுல் அட் எலியேசன் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மறுபடியும் மே மாதம் 14 ந் தேதி வேலை நிறுத்தம் செய்தனர். முதலில் அது ஒரு தனிப்பட்ட ஒன்றுடனும் சம்பந்தப்படாத சம்பவம் என கருதப்பட்டது. ஆனுல் மூன்று நாட்களுக்குள், ஒன்றுடனும் சம்பந்தப்படாதது என கருதப்பட்ட சம்பவம் பிரான்ஸ் முழுவதும் பரவத் தொடங்கியது. தொழிற்சாலைகள் அடுத்தடுத்து மூடப்பட்டன. தொழிற்சாலை மனேஜர்கள்

குத் தலைமை தாங்கவில்லை ஆச்சர்யத்துக் குரியது என்னவெனில், அவை அந்த இயக்கத்தின் தன்மையையே சரிவர அறிந்து கொள்ளவில்லை தொழிற் சங்கத் தலைவர்களில் அநேகருக்குத் தங்களை என்ன தாக்கியது, எங்கே தங்களைத் தாக்கியது என்பதையே சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை.

### பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் நிலைமை உண்டாயிற்று

பிரான்ஸில் தொழிற் சங்கங்களின் அணிதிரட்டப்பட்ட தொழிலாளர்களில் மொத்தத் தொகை 20 லட்சமே யாகும். எனினும், ஒரு கோடி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிற்சாலைத் தொழிலாளர்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள், வங்கிகளில் வேலை செய்யும் லிகிதர்கள் ஆகியோர் மட்டுமல்ல, பிரான்ஸில் பிரபலம் வாய்ந்த கேளிக்கைக் கூடமான ''வொள பேர்க்கி'' யில் உள்ள பெண்கள் கூட வேலை நிறுத்தம் செய்தனர். இந்த இயக்கத்தில் ரெனுேல்ட் கார் உற்பத்தித் தொழிற்

9-ம் பக்கம் பார்க்க

## மறுக்க முடியாத சம்பவங்கள்

# சோவியத் திரிபுவாத ஆட்சி

# அராபியருக்கு கழுத்தறுத்த விதம்

இளங்கீரன்

இஸ்ரேலை அங்கீகரித்து, அதற்கு ஆதரவு காட்டி அனுசரணையாக நடந்துவந்த சோவியத் திரிபுவாதிகள், அதே சமயம், தமது ''உதவிகள்'' மூலம் அராபியர்களின் ''நண்பர்கள்'' என்றும் காட்டிக் கொண்டார்கள் அது மட்டுமல்ல, அராபியர்மீது வெளியார் ஆக்கிரமிப்புச் செய்தால் தாங்கள் உதவிக்கு வருவோமென்றும், வாயால் மிகப் பெருமையுடன் பிரகடனப்படுத்தினார்கள். 1966-ல் கெய்ரோவிற்கு விஜயம் செய்த சோவியத் பிரதமர் கொஸிஜின் ''சோவியத் யூனியன்தான் வைத்திருக்கும் எல்லா ஆயுதங்களைக் கொண்டும் அதன் நண்பர்களைப் பாதுகாக்கும் ''என்றும், அராபிய மக்கள் உதவிக்கும் ஆதரவுக்கும் எப்பொழுதுமே சோவியத் நாட்டை எதிர்பார்க்கலாம்'' என்றும் பகிரங்கமாகப் பகன்றனர்.

இப்படியெல்லாம் வாயால் அலங்காரமாக பறையடித்தவர்கள் செயலளவில் எப்படி நடந்துகொண்டார்கள்? கூடிக் குலாவிக் கழுத்தறுப்பது என்று சொல்வார்களே அதைத்தான் இந்தச் சோவியத் திரிபுவாதத் துரோகிகள் செய்தார்கள். இதனைப் பின்வரும் சம்பவங்கள் எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தன.

மே இறுதி வாரத்தில் ஏகாதிபத்திய—இஸ்ரேல் கூட்டுச் சதித்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. சிரியாவைக் கண்மூடித் திறப்பதற்குள் திடீரெனத் தாக்கிக் கைப்பற்றுவது என்பதுதான் அத்திட்டம் ''நாங்கள் சிரியாவுக்குள் நுழைந்து டமஸ்கஸ்ஸைக் (சிரியத் தலைநகர்) கைப்பற்றுவோம்'' என்று இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் ஒரு சமயம் பகிரங்கமாகக் கூறிய ஆக்கிரமிப்பு நோக்கத்தைச் செயற்படுத்துவதான் இத்திட்டம்.

ஆனால், இத்திட்டத்தைக் கண்டுபிடித்த ஐக்கிய அரபு குடியரசும், சிரியாவும் அதற்கு எதிரான மறு தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருந்தன இந்தச் சமயத்தில் ஐக்கிய அரபுக் கூட்டணிக்குள் ஜோர்டானும் சேர்ந்து கொண்டது. எனவே, சரியான விமானப் பாதுகாப்பின்கீழ் ஜோர்டானின் தலைநகரான அம்மானிலிருந்து இஸ்ரேலுக்குள் நுழைந்து, அதன் தலைநகரான டெல் அவிவைக் கைப்பற்றி, இஸ்ரேலை இரு கூறாக்கி, வடபகுதியை சிரிய—இராக் படைகளிடம்விட்டு, தெற்கை எகிப்தியப் படைகளுக்குத் திறந்து விடுவது அராபியப் படைகளுக்கு இலகுவாயிருந்தது. ஆனால் இது நடைபெறவில்லை. ஏன்?

இது அமெரிக்க—இஸ்ரேல் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தெரிந்துவிட்டது. இதனால் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இந்த அராபிய திட்டத்தைத் தெரிவித்தது நிச்சயமாக ஒரு மூன்றாவது கோஷ்டிதான் என்பது தெளிவாகிறது; இந்த மூன்றாவது கோஷ்டி எந்த வல்லரசு? ஐ. அ. கு—வின் நேசநாடு, அல்லது இத்தகவலைப் பெற்ற ஒரு நேசநாடாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ஒரு நேசநாடு—இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும். குறிப்பாக, எந்த நாடு என்பதை வாசகரின் ஊகத்திற்கே விட்டு விடுகிறோம்.

### சதி வலையைப் பின்னினர்

1967 மே இறுதியில் நிலைமை சூடேறிய சமயத்தில் முன்னெச்சரிக்கையாக ஐ. அ. கு. அகாபாவளை குடாவை மூடிய போது, அதற்கு சோவியத் திரிபுவாத ஆட்சி எவ்வித ஆதரவும் தரவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. அது மட்டுமன்றி சிரியாவை நசுக்கி விடுவதாக இஸ்ரேல் பயமுறுத்திக்கொண்டிருந்தபோது கூட சோவியத் யூனியன் கைகளைக் கட்டிக்கொண்டு அதைப் பார்த்துக் கொண்டிருந்ததே தவிர சிரியாவுக்கு ஆதரவாக ஒரு விரலைக் கூட அசைக்கவில்லை, பற்றாக்குறைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் சேர்ந்துகொண்டு அராபிய மக்களுக்கு எதிரான அரசியல் சதி வலையைப் பின்னிக் கொண்டிருந்தனர். திரைமறைவில் தொடர்ச்சியான நடவடிக்கைகள் உருக்கொண்டன.

### ஒரே ஒரு வழிதான் இருந்தது

இவற்றில் ஓர் அம்சம்தான் அராபிய நாடுகளின் கையைக் கட்டிப்போடுவது. அதாவது;

9—ம் பக்கம் பார்க்க

## சோவியத் திரிபுவாத நாசகார சக்திகள் உலகின் பிற்போக்குப் பகுதி . . .

6-ம் பக்கத் தொடர்

புரட்சி ''சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரானது என்ற சோவியத் திரிபுவாதிகளின்

### பொய்ப் பிரசாரத்தை உடைத்தெறிகிறது கட்டுரை

மாசே—துங் தலைமையில் கட்சியின் நோக்கத்திற்காக மக்கள் போராடுகின்றனரென்றால், சீன கம்யூனிஸ்ட் கட்சி முதிர்ச்சி அடைந்துள்ளது, அதன் கொள்கைகள் சரியானவை, கட்சிக்கும் மக்களுக்கும் இடையே பெரும் ஒற்றுமை உண்டு என்பதைத்தான் நிரூபிக்கின்றது. மக்களின் ஆதரவு இருப்பதால் தான் சீன கம்யூனிஸ்ட் கட்சி க்தி வாய்ந்ததாய் உள்ளது. கலாச்சாரப் புரட்சி இதனை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கிறது.

இன்று ''சீன கம்யூனிஸ்ட் கட்சி அழிக்கப் படுகிறது'' என்று கூறுபவர்கள்தான் கட்சியில் உள்ள எதிர்ப் புரட்சிகர திரிபுவாத சக்திகளை ஆதரிப்பவர்கள். சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் கொள்கையையும் எதிர்க்கத் தூண்டுபவர்கள்.

தூக்கி எறியப்பட்ட இந்த நண்பர்களுக்காக சோவியத் யூனியனிலுள்ள சீரழிந்தவர்களும் மேற்கத்திய முதலாளி வர்க்கத்தினரும் கவலைப் படுவதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது?

பொல்ஷ்விக்குகள் இத்துரோகிகள்மேல் கருணை காட்டினால் அது ஆச்சரியமானதாய் இருக்கும்.

### சோவியத் தலைமையின் அச்சம்

சீனாவின் மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி ''சோவியத் யூனியனுக்கும் சோவியத் மக்களுக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டது'' என்ற சோவியத் திரிபுவாத ஆட்சிக் கும்பலின் அபாண்டத்தை அம்பலப்படுத்திக் கட்டுரை பின்வருமாறு வினவியது:

''சீனாவில் சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டம் மக்களுக்கு நன்மையாகாதா? சந்தேகமில்லாமல், அது அவர்களின் நன்மைக்கே. சோவியத் ''தலைமைக்கு'' அது நன்மையாகாது. சோவியத் பத்திரிகைகளில் பார்த்தால் தெரியும். சீன கம்யூனிஸ்டுகளும், தொழிலாளி வர்க்கமும் சந்தர்ப்பவாதத்தையும் சீரழிவையும் எதிர்த்து நிற்கும் உறுதி சோவியத் யூனியனின் தொழிலாளி வர்க்கத்திற்கும் சோவியத் மக்களுக்கும் ''தொற்றி'' விடும் என்று சோவியத் தலைமை அஞ்சுகிறது அது சோவியத் தலைமைக்கு நன்மை தராது. ஏனெனில், குருஷ்சோவின் காலம் முதல் சோவியத் தலைமை சீரழிந்து வந்திருக்கிறது. சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைப்பிடித்துள்ளது. இறுதியில் யூகோஸ்லேவிய திரிபுவாதிகளுக்கும் சீன எதிர்ப்பாளிகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது; உலகப் புரட்சிகர இயக்கத்திற்குத் தடையாக உள்ளது. சோவியத் தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் மக்களினதும் உடலில் ஏற்பட்ட ஒரு புற்றுநோய, அது.

ஆதலால்தான் சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வமான பிரச்சார இயந்திரங்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் எதிராகப் பொய்மூட்டைகளை அவிழ்த்துவிட்டுள்ளன.

### சோவியத் பிரச்சார இயந்திரங்களின் விசேஷ முறைகள்

சோவியத் யூனியனின் பிரச்சார இயந்திரங்கள் ''விசேஷ முறையை'' கையாள்கின்றன என்பது கவனத்திற்குரியது. இந்த ''விசேஷ முறை'' என்னவென்றால் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலுள்ள அடிப்படையான—கொள்கை ரீதியான—பிரச்சினைகள் பற்றி மௌனம் சாதித்துக் கொண்டு சோவியத் யூனியனின் உழைக்கும் மக்களை ஏமாற்றி, சோஷலிஸ நாடுகளை ஏமாற்றி, உலகின் கம்யூனிஸ்டுகளை ஏமாற்றி, தமது காரியம் பார்ப்பதே சோவியத் அரசியல்வாதிகளின் நோக்கமாக உள்ளது.

இந்த வேற்றுமைகளை ஆராய சோவியத் மக்கள் அனுமதிக்கப்பட்டால் இந்த சோவியத் அரசியல்வாதிகள் அம்பலப்படுத்தப்படுவர், இவர்களுக்கெதிராக மக்கள் போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பது அவர்களுக்குத் தெரியும். இதைக் கண்டுதான் அவர்கள் அஞ்சுகின்றனர்.

கலாச்சாரப் புரட்சியின் தலைவர்களும் அதில் பங்கு கொள்பவர்களும் சோவியத் யூனியனின் சீரழிந்த சக்திகளைத்தான் எதிர்க்கின்றனர். (சோவித் பெரும் தலைவர்கள் அடிப்பட்டவர்களே) சோவியத் மக்களை அவர்கள் எதிர்க்கவில்லை.

சீரழிந்த சக்திகளை எதிர்த்தும் போராடும்படி கலாச்சாரப் புரட்சி விடுத்த அறைகூவல் சோவியத் யூனியனுக்கு நன்மையானதே ஆதலால், இந்தத் தவறான'' குற்றச் சாட்டுக்களை தொடுத்தவர்களைத்தான் நாம் அம்பலப் படுத்தியுள்ளோம். அவர்கள் தான் சோவியத் மக்களுக்கு எதிரானவர்கள், லெனினும் ஸ்டாலினும் உருவாக்கிய கட்சிக்கு எதிரானவர்கள், புரட்சிக்கு எதிரானவர்கள்.

சீனாவின் பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி சீர்கேட்டுக்கும், சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான தவிர்க்க முடியாத இயக்கம் என்று கட்டுரை முடிவில் குறிப்பிடுகிறது.

இப்புரட்சி சீன பொல்ஷ்விக்குகளின் தலைமையில், உண்மையான லெனினிஸ முறையில் சீன மக்களாலேயே நடத்தப்படுகிறது. சோவியத் அரசியல் வாதிகள் உட்பட சகல விதமான சீர்கெட்டவர்களும் உயர்மட்டத்தில்—திரை மறைவில்—மக்கள் பங்கு கொள்ளாமல் (மக்களை ஏமாற்ற) நடத்துகின்ற அரசியலுக்கு நேர் மாறானது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் சீரழித்து திரிபுவாத சக்திகளின் ஆட்சியை நிறுவுகின்ற சீர்கேட்டிற்கும், முதலாளித்துவம் மறுபடி புகுத்தப்படுவதற்கும் எதிரான போராட்டத்திற்கு சீன கலாச்சாரப் புரட்சி ஒரு தலைசிறந்த வழி காட்டியாக உள்ளது.

கலாச்சாரப் புரட்சிக் கெதிராக சோவியத் அரசியல்வாதிகள் கட்டவிழ்த்து விட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் யாவும் பொய்யானவை, சோவியத் யூனியன்னதும் உலகின் ஏனைய நாடுகளினதும் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றுகின்ற முயற்சி.

தமது மக்களைக் கண்டு அஞ்சி, தமது சலுகைகளை இழந்து விடுவோமென்ற பயத்தில் சோவியத்தின் சீர்கேட்டுச் சக்திகள் நச்சுத் தன்மை வாய்ந்த சீன எதிர்ப்பு பிரச்சாரத்தை நடத்தி உலகின் படுபிற்போக்கான பகுதிகளிடன் ஒன்றுபட்டு அவர்களுடன் பொதுவான நலன் கருதுபவரென தம்மைக் காட்டிக் கொண்டனர்.

சோவியத் திரிபுவாதிகள் நடத்தும் சீன விரோத இயக்கம், அவர்களையே அம்பலப் படுத்தியுள்ளது. இச் சீர்கெட்டவர்களின் ஆட்சியையே தூக்கி எறிய வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டியுள்ளது. பின்பு சோவியத் யூனியனிலும் பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி நடைபெற வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டியுள்ளது.

# பிரான்ஸில் நடப்பவை

# மா சே துங் சிந்தனையின்

# வெற்றியை நிரூபிக்கின்றன

◎ —7-ம் பக்கத் தொடர்

சாலையைச் சேர்ந்த இளம் தொழிலாளர்களே முக்கிய பாகத்தை வகித்தனர். இத் தொழிற் சாலைதான் பிரான்சில் மிகப் பெரிய தொழிற் சாலையாகும். அங்கு 66,000 தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர். இவர்கள் தொழிற் சாலையின் நிர்வாகத்தைப் பூரணமாகக் கைப்பற்றினர்.

தொழிலாளர்கள் இவ்வாறு திரண்டெழுந்ததற்கான காரணம் மிகவும் எளிதானதாகும். மே மாதம் 13-ந் தேதி நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அரசாங்கம் மாணவர்களுக்கு அடிபணிந்தது. பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பிடு ஈரானிலிருந்து 11-ந் தேதி அவசர அவசரமாகப் பாரிஸுக்குத் திரும்பி மாணவர்களின் கோரிக்கைகளை அளித்தார். ஜனநாயகப் படுத்துவதற்கு சொபோன் பல்கலைக் கழகமும் இணக்கம் தெரிவித்தது. இந்தப் பாடத்தைத் தொழிலாளர்களும் சரியாகப் புரிந்து கொண்டனர். நேரடி நடவடிக்கையின் மூலம் மாணவர்கள் தமது கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமேயானால் தொழிலாளர்கள் ஏன் தமது கோரிக்கைகளை நேரடி நடவடிக்கையின் மூலம் வென்றெடுக்க முடியாது என ஒவ்வொரு தொழிலாளியும் தன்னைத்தான் கேட்டுக்கொண்டான். அவர்கள் கேட்ட கேள்வி பதில் அளிக்கக்கூடியது. தொழிலாளர்களின் நேரடி நடவடிக்கைக்கு ஏதிராகப் பிரெஞ்சுத் திரிபுவாதிகள் கட்டிய அணைகள் யாவும் ஒரு நொடிக்குள் சுழல காற்றுக்கு அடிபட்ட தூசு போல் அள்ளி வீசப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் நிலை உண்டாயிற்று.

### திரிபுவாதிகளின் இழி செயல்

சோவியத் செய்தி ஸ்தாபனமும், பிராவ்டாவும் மாணவர்கள் மீது நடத்திய தாக்குதல்களிலிருந்து பிரான்ஸில் நடைபெற்ற முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிகர நிகழ்ச்சிகள் பற்றிய வர்க்க சமரச நவீன திரிபுவாதிகளின் கண்ணோட்டத்தைத் தெளிவாகக் காட்டின.

இந்த மாபெரும் புரட்சிகர இயக்கத்தை ''வெறி பிடித்த இடதுசாரி வாலிபர்களின் பொறுப்பற்ற செய்கை, தூண்டி விடும் சிறு குழுவினரின் ஆணவம்'' என சோவியத் திரிபுவாத ஏடான பிராவ்டா வர்ணித்தது. ''அராஜகவாதிகள், தூண்டி விடுவோர் ஆகியோரின் இப் பொறுப்பற்ற செயல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு எதிராக அதிகாரிகள் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு உதவியளிக்கிறது'' என பிராவ்டா மேலும் கூறியது.

சோவியத் குண்டாந்தடிக்கு அடிபணிந்து பிரான்ஸ நவீன திரிபுவாதிகள் இந்த இயக்கத்தைப் புரட்சிகர நிலைமையிலிருந்து திசை திருப்பி, எது விதத் தீங்கும் விளைவிக்காத பொருளாதார வழிகளில் எடுத்துச் செல்வதற்கு முற்பட்டனர். திரிபுவாதிகளின் தலைமையில் உள்ள சிஜிரி எனும் தொழிற் சங்க சம்மேளனத்தின் திரிபுவாதத் தலைவரான சீகை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதோடு: அப்பேச்சு வார்த்தைகளில் அரசாங்கம் அளித்த சில பரிதாபத்துக் குரிய சலுகைகளைக் கொண்ட ஒப்பந்தத்தையும் வெளியிட்டார். இச் சிறு சலுகைகளை ஏற்றுக் கொள்ள தொழிலாளர்கள் தயாராயில்லை. ரெனல்ட் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மத்தியில் சிகை பேச முற்பட்டபோது, அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் அவருடைய பேச்சுக்குச் செவி படுக்க மறுத்தனர்.

இச் செய்திப் பத்திரிகைக்குப் போகும் போது இவ்வேலை நிறுத்தம் முடிவுறாமல் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால் பிரான்ஸின் பரிதாபமான நிலை யாதெனில், ஒரு புரட்சி நடைபெற வேண்டிய நேரத்தில் வேலைநிறுத்தப் போராட்டமே நடைபெறுகிறது என்பதுதான். ஜனாதிபதி டிகோல் இந்நேரத்தில் திரிபுவாதிகளின் உதவிக்கு 'ஓடோடியும்' வந்தார். படு மூர்க்கத்தனமான பொலிஸ் அட்டூழியத்தைக் கட்டவிழ்த்துவிட்டு தமது அதிகார பலத்தைக் காட்டியதோடு, மக்களின் கவனத்தை இந்த நிலைமையிலிருந்து திசை திருப்புவதற்காகப் புதிய தேர்தல்களை நடத்துவதென முடிவெடுத்துள்ளார்.

இத் தேர்தல் விளையாட்டில் திரிபுவாதிகள் விசுவாசத்துடன் பங்குபற்றுவர். பிரஞ்சு நாட்டுத் திரிபுவாதிகள் இப் போராட்டத்தைச் சட்ட ரீதியான—சமாதான—வழிகளில் இட்டுச் செல்வதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்த போதிலும் அந் நாட்டு மாணவர்களும், இளம் தொழிலாளர்களும் நகர கொரில்லா யுத்தத்தில் ஈடுபடுவதற்குரிய—முன்னெப்பொழுதுமே கண்டிராத புரட்சிகர உணர்வையும் சக்தியையும் காட்டினர். சில வேளைகளில் தாங்களே கட்டியெழுப்பிய தடைகளுக்குப் பின்னால் இருந்து கொண்டு குழப்பத்தை அடக்கும் பொலிஸ் படையுடன் மணித்தியாலக் கணக்கில் போரிட்டனர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் 10 மணித்தியாலங்களுக்கு மேலாக இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

### புதிய நிலைமை

பிரதான பாதைகளில் இருக்கின்ற விடுதிகளில் உள்ள தொலைபேசிகளைப் பாவித்து தமது சொந்தப் பாதுகாப்பு, உளவு பார்த்தல் ஆகியவற்றில் தாமே ஈடுபடப் பழகிக் கொண்டனர். பொலிஸ்படையினர் எங்கு குவித்து வைக்கப் பட்டுள்ளனர், அவர்களுடைய ஆயுதங்கள் எங்கே இருக்கின்றன என்பன போன்ற இரகசியங்களையும் அறிந்துகொண்டனர். இரும்புத் தொப்பி, மூக்குக்கண்ணாடி, நாரத்தம் பழச்சாற்றிலே நனைக்கப் பட்ட கைக்குட்டைகள் ஆகியவற்றைச் சேகரித்து அவற்றின் துணைகொண்டு பொலிசாரின் தாக்குதல்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொண்டனர். கண்ணீர்ப் புகைத் தாக்குதல்களிலிருந்தும் தம்மைப் பாதுகாக்க வேண்டிய வழிவகைகளைத் தேடிக் கொண்டனர்.

பிரான்ஸ் இனிமேல் எப்போதும் முன்னிருந்த நிலைக்குத் திரும்பவும் செல்லமாட்டாது இந்தப் போராட்டம் பிரெஞ்சு மக்களை இடதுசாரி நிலைமைக்குக் கொண்டு சென்றுவிட்டது. ஒரு புதிய புரட்சிகர சக்தி வீறிட்டெழுகின்றது. பிரான்சில் நடைபெறுகின்ற சம்பவங்கள் யாவும் அந்நாட்டுக்குள் மட்டும் கட்டுப்பட்டு நிற்கவில்லை. மேற்கு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் பரவத் தொடங்கி விட்டது. உலகப் புரட்சிகர இயக்கத்தில் இது ஒரு முக்கியமான திருப்பு முனையாகும்.

மேற்கு ஐரோப்பியாவிலும் வட அமெரிக்காவிலும் பரவியுள்ள இப் புரட்சிகர சுவாலை, உலக ஏகாதிபத்தியம் சிக்கியுள்ள பொருளாதார நெருக்கடி எவ்வளவு தூரம் மேலும் ஆழமாகச் சென்றுவிட்டது என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. இதுசோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியை தலைமைப் பீடமாகக் கொண்ட நவீன திரிபுவாதிகளால் வளர்க்கப்படும் பிழையான தத்துவங்களை அம்பட்டமாக நிராகரிப்பதாகும். மா சே—துங் சிந்தனையின் வெற்றியாகும்.

# எதிரியும் நண்பனும் கூறும் ஆலோசனை

◎ —8-ம் பக்கத் தொடர்

நீ முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளாதே. நீ முதலில் நடவடிக்கை எடுக்காதே இஸ்ரேல் தாக்கட்டும். அதுவரைக்கும் நீ சும்மா கையைக் கட்டிக் கொண்டிரு என்பதாகும். இதனை நாஸரின் வாக்கு மூலமே மெய்ப்படுத்தியது. ஜூன் 9 ந் தேதி நாஸர் சொன்னார்: ''ஜோன்ஸன் வாஷிங்டனிலுள்ள எமது தூதுவர் மூலம், எங்களைக் கட்டுப்படுத்தும்படியும் சுய கட்டுப்பாட்டை மேற்கொள்வதுடன் சுடுவதை ஆரம்பிப்பதில் முதன்மையாக இருக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். அதே இரவில், இந்த நாட்டிலுள்ள சோவியத் தூதுவர் அதிகாலை 3.30 மணிக்கு எங்களுடன் ஒரு அவசரக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டதுடன் ''சுடுவதில் முதலாவதாக இருக்கக்கூடாது'' என்று சோவியத் அரசாங்கத்தின் வலியுறுத்தலை என்னிடம் கூறினார்.''

எதிரியும், நண்பனும் நாஸருக்கு ஒரேவிதமான ஆலோசனையைக் கூறியுள்ளனர். தனக்கு எதிரியும் நண்பனும் ஒரேவிதமான யுத்த தந்திர ஆலோசனையைத் தருவதிலுள்ள அரசியல் சூட்சுமத்தை நாஸர் கூர்ந்து பார்க்கவில்லை.

ஜூன் 5ந் தேதி இஸ்ரேல் மின்னல் வேகத் தாக்குதலைத் தொடுத்ததும், யுத்தம் உச்சத்தை நோக்கி விரைந்ததும் அவசர அவசரமாக வாஷிங்டன்—மாஸ்கோ தொலைபேசி (வெள்ளை மாளிகைக்கும்—கிரெம்லினுக்கும் இடையிலான ''ஹொற்லைன்'' எனப் படுவது) இயங்கியது. அதில், இந்தப் பிரச்சினையில் அமெரிக்காவுடன் மோதத் தாங்கள் விரும்பவில்லை என்பதை கொஸிஜின் வெளிக்காட்டினார். இந்தத் தொலைபேசி விஷயத்தைப் பற்றிப் பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையான டெயிலிமிரரில் ஜூன் 13ந் தேதி ரோஸ் மார்க் என்பவர் எழுதியது கவனிக்கத்தக்கதாகும். அவர் எழுதியதாவது:

'மத்திய கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 5 மணித்தியாலம் 10 நிமிடத்தின் பின்னால் வாஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையின் அடித்தளத்திலுள்ள அவசர வெளிநாட்டுச் செய்தியைப் பதிவு செய்யும் யந்திரம் (ஹொற்லைன்) ஏதோ செய்தியைப் பதிவு செய்ய ஆரம்பித்தது. கிரெம்லினிலிருந்து ஒரு நிமிஷத்திற்கு 66 வார்த்தை வேகத்தில் ஏ. கொஸிஜின் என்று கையொப்பமிடப்பட்ட ஒரு செய்தி வந்தது. அதன் கருத்து என்னவெனில், மத்திய கிழக்குப் பிரச்சினையில் அமெரிக்காவுடன் ஒரு யுத்தம் சோவியத் யூனியனுக்குத் தேவையில்லை என்பதாகும்''

இது மட்டுமல்ல, பிரிட்டிஷ் வெளிநாட்டுக் காரியதரிசி மாஸ்கோவுக்குப் பறந்து சென்றார். அதே சமயம், ராஜாங்க அமைச்சர் தோம்ஸன் வாஷிங்டனுக்கு ஓடினார். மாஸ்கோவில் கொஸிஜினும் அமெரிக்கத் தூதரும் அடுத்தடுத்துக் கலந்துரையாடினர். விளைவு? உலக யுத்தமாகக் கூடாது, சமாதானம் வேண்டும், சமாதான பூர்வமான தீர்வு என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்ட அராபிய நாடுகள் நட்டாற்றில் விடப்பட்டன!

### ஒரே ஒரு வழிதான இருந்தது

அராபியர்மீது திடீர் தாக்குதல் நடத்தி இஸ்ரேல் ஆக்கிரமித்த வேளையில் அராபிய நாடுகளுக்கும் மக்களுக்கும் ஒரேயொரு வழிதான் இருந்தது. அதுதான் திருப்பித் தாக்குவது; என்னதான் நஷ்டங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் ஆக்கிரமிப்பாளனைத் தமது பூமியிலிருந்து விரட்டும் வரை யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவது. இந்த உணர்வும், இதனை வெளிக்காட்டும் குரலும் அராபிய உலகெங்கும் ஒலித்தன. அரபு உலகுக்கு வெளியேயும், அமெரிக்க—இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கெதிரான சகல மக்களும் இதனையே எதிர்பார்த்தனர். ஆனால், சோவியத் யூனியன் ஐ. நா. பாதுகாப்பு சபையில் யுத்த நிறுத்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலம் இதற்குக் கொள்ளி வைத்தது. அதாவது, அமெரிக்க—பிரிட்டிஷ் தூண்டுதலின் பேரில் அந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இஸ்ரேலுக்கும் சாதகமான நிலையில்—இஸ்ரேல் தன்னைப்போல் நான்கு மடங்கு அரபுப் பிரதேசத்தை பிடித்துக்கொண்ட நிலையில்—யுத்த நிறுத்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது. சோவியத் யூனியனின் பிரதிநிதியான நிக்கலாய் பிடரெங்கோவினால் பாதுகாப்பு சபையில் கொண்டுவந்து நிறைவேற்றப் பட்ட இந்த யுத்த நிறுத்தத் தீர்மானம் இஸ்ரேல் தனது பழைய எல்லைக்கு வாபஸ் வாங்கவேண்டுமென்று கூடக் கோரவில்லை. நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தைத்தான் கோரியது ஆக்கிரமிக்கப்பட்டவனுக்கும், ஆக்கிரமித்தவனுக்குமிடையில் எவ்வித வேறுபாட்டையும் நோக்கவில்லை.

இதனைக் கேட்டு அராபிய மக்கள் கொதித்தெழுந்தார்கள். நாஸர் கூட பாதுகாப்பு சபையின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார். ஆனால், காலையில் நிராகரித்த நாஸர் மாலையில் மாஸ்கோவிலிருந்து அவருடைய விசேஷத் தூதர் வந்ததும் பாதுகாப்பு சபையின் தீர்

12-ம் பக்கம் பார்க்க.

# புதிர்

## சிறு கதை

### நக்கீரன்

''தங்கம் நாளையண்டைக்கு திங்கட்கிழமை புதிர்'' மண்வெட்டியை வீட்டுத் தாவாரத்துக்குள் வைத்து விட்டு, வீட்டுக்குள் குனிந்து உள்ளிட்டபடியேகூறினன் வேலுப்பிள்ளை.

''எப்ப திங்கள் கிழமையா? உடையாருக்குத் தெரியுமோ?'' என்று திருப்பிக் கேட்டாள் தங்கம்.

''ஏன் உடையாருக்குத் தெரியாட்டால் என்ன? போன வருஷம் உடையாருக்குச் சொல்லிக் கொண்டே புதிர் எடுத்தனுங்கள்? புதிர் எடுக்கிறதுக்கு எங்கையாவது சொல்லிக் கொண்டா எடுக்கிறவை? ஆற்றையும் வயலுக்கை ஆர் போய் எடுத்தாலும் கேள்வியில்லை. அது தான் எங்கேயும் வழக்கம். நாளையண்டைக்குப் புதிர் எடுக்கிற தெண்டு உடையாற்றை வயலுக்கை வேலை செய்யிற நாங்கள் இருபத்தைஞ்சு பேரும்தான் எங்கடை சங்கத்தில் தீர்மானிச்சிருக்கிறம்'' வேலுப்பிள்ளை வேலை செய்துவிட்டு வந்த களையோடு தங்கம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சளையாது படபடவென்று பதில் சொன்னன்.

''அது சரி இந்த முறை உடையார் என்ன சொல்லுருரோ தெரியாது. நீங்கள் எல்லாரும்சங்கத்திலை சேர்ந்து கொண்டு சம்பளம் கூட்டித் தரச்சொல்லிக் கேட்டது அவருக்குப் பொல்லாத கோவம். அதுதான் என்ன செய்யிருரோ தெரியவில்லை. ஆறு மாதமாய் மூண்டரை ரூபாவுக்கு உடம்பை முறிச்சு உழைச்ச உழைப்பு. என்னமோ இனியாவது நல்ல காலம் பிறக்கட்டும்'' சொல்லியபடியே வேலுப்பிள்ளைக்கு முன்னுல் கோதுமை மாபிட்டை பெட்டியுடன் தூக்கி வைத்தாள்.

பெட்டிக்குள் கையை வைத்த வேலுப்பிள்ளை வெறுப்புடன் சொன்னன் ''என்ன நாசமாய்ப் போன அரசாங்கம் வந்து கமக்காரன் நிம்மதியோடை கால மேலை தின்னுற பழஞ் சோத்தைக் கூட்ப் பறிச்சுப் போட்டுது. அமெரிக்கன் கடலிலை கொட்டுற உக்கல் மாவைக் கொண்டு வந்து அதுவும் அருவிலைக்குத் தந்து சனங்கள் எல்லாம் சாகப் போகுதுகள். இந்த மாவைத் திண்டு எங்கை பாத்தாலும் எல்லாருக்கும் வருத்தம். என்ன அரசாங்கமும் மந்திரியளுமோ ''

''இப்ப சொல்லி என்ன? போன லெக்சனிலை எங்களுக்கு வோட்போடுங்கோ உங்களுக்கு ஒரு குறையுமில்லாமல் செய்யிறம் எண்டு கொண்டு வந்தாங்கள் இப்ப என்னடா எண்டு பாத்தால் இந்த நாசமாய்ப் போன அரசாங்கத்தோடை சேந்து கொண்டு சனங்களைப் பட்டினி கிடந்து சாகச் சொல்லுருங்கள்'' என்று முணுமுணுத்தாள் தங்கம்.

''இனிமேல் எந்தக் கள்ளன் எண்டாலும் வந்து வோட்டுப் போடு எண்டு கேக்கட்டன் பார்ப்பம் என்ன நடக்குதெண்டு...'' வேலுப்பிள்ளை ஆத்திரத்தோடு கூறினன்.

''அது சரி, உடையார் கிழமைக்கு பத்துப் பத்து ரூபா தானே தந்தவர். மிச்சம் எப்பவாம் தாருர்?'' என்று தொடர்ந்து கேட்டாள் தங்கம். வேலுப்பிள்ளைக்கு தொண்டைக்குள் பிட்டு விக்கியது. செம்புடன் தண்ணீரைத் தூக்கி மளமளவென்று குடித்துவிட்டுச் சொன்னன்.

''எல்லாம் நெல்லுவித்தாப் பிறகு மொத்தமாக கணக்குத் தீர்க்கிறதெண்டு சொல்லியிருக்கிருர். அப்பிடி ஏதும் சேட்டை விட்டால் சங்க மூலமாக அடிபடுவம்'' என்று உரமாகச் சொன்னன் வேலு.

''என்னவோ—கடன் ஒரு தொகை கிடக்குது. பிள்ளையள் ஒண்டுக்கும் மாத்திக்கட்டுறதுக்கு துணி இல்லாத நிலை ....'' என்று சொல்லிக் கொண்டு வந்தவள் முற்றத்திலிருந்த குழந்தை வாயில் மண்ணை அள்ளிப் போடுவதைக் கண்டதும் அதைத் தூக்க வெளியே ஓடினன்.

★

வேலுப்பிள்ளையின் மனதுக்கு பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

போன வருஷம் தான் வேலுப்பிள்ளையின் கடைசி இரண்டு பரப்புக் காணியும் உடையாருக்குச் சொந்தமானது. அதற்கு முன்னமே நாலு பரப்பு காணியும் உடையாருக்குச் சொந்தமாகப் போய் விட்டது. தங்கத்தினுடைய பிள்ளைப் பெறுவிற்காகத்தான் அந்த இரண்டு பரப்புக் காணியையும் உடையாரிடம் ஈடு வைத்து பணம் வாங்கினன். பின்னர் அந்தப் பணத்தை அவனுல் கட்ட முடியவில்லை. எந்த வழியாலே அவனுக்குப் பணக் வரும்? காணி பறி போயிற்று.

வேலுப்பிள்ளை கலங்கினன். உடையாரிடம் கெஞ்சிப்பார்த்தான். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்தால் தான் எப்படியும் பணத்தைக் கட்டி விடுவதாக ஏதோ ஒரு நம்பிக்கையில் சொன்னன். எந்தவித பிரயோசனமுமில்லை. உடையார் அவனைக் கூப்பிட்டு தன்மையாகச் சொன்னர்

''தம்பி வேலுப்பிள்ளை, இந்தச் சின்ன விஷயத்துக் கெல்லாம் ஏதோ குடிமுழுகிப் போனமாதிரி ஏன் கவலைப்படுகிருய்? இந்த இரண்டு பரப்புக் காணியை வைத்துக் கொண்டு நீ என்ன செய்வாய்? உனக்கு இருக்க இடந்தானே வேணும்? நீ இந்த இரண்டு பரப்புக் காணியிலேயே இருந்துகொள். பேசாமல் என்ரை கமத்திலை வந்து வேலை செய், சம்பளம் ஒழுங்காகக் கிடைக்கும். அதை விட்டிட்டு நீ என்ன செய்யப் போருய். பெண்சாதி, பிள்ளையள் பாவம்! நீ ஒண்டுக்கும் கவலைப்படாதே. உன்னைப்போலை தானே இப்ப வேலை செய்யிற நடராசா, பொன்னம்பலம், கணவதி எல்லாரும். இந்தா இதைச் சிலவுக்கு வைச்சுக் கொள், நாளைக்குத் தொடக்கம் வேலைக்கு வா'' என்று சொல்லி ஐந்து ரூபா நோட்டு ஒன்றை வேலுப்பிள்ளையின் கைக்குள் செருகிவிட்டுச் சென்று விட்டார்.

உடையார்போன திசையை நோக்கியபடியே யோசித்துக் கொண்டு நின்ருன் வேலுப்பிள்ளை. அவன் என்ன செய்வான் பெண்சாதி, பிள்ளைகள் எல்லாவற்றையும் நினைக்க அவன் மூளை கலங்கியது. பேசாமல் அடுத்த நாள் உடையாரின் வயலுக்கு வேலைக்குப் போனன்.

★

பழைய நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பெட்டியுடன் பிட்டை அப்படியே வைத்து விட்டு வெளியே வந்து கையைக் கழுவினன். ஒரு சுருட்டொன்றைச் சுற்றிப் பற்ற வைத்துக் கொண்டு, ''தங்கம் நான் வயலுக்குப் போறன். நான் தான் இண்டைக்கு வயலுக்குக் காவல்'' என்று சொன்னபடியே வளவுப் படலையைத் திறந்து கொண்டு பாதையில் நடக்கத் தொடங்கினன். அக்கம் பக்கத்தில் அவனேடு வேலை செய்யும் மற்றவர்களுடைய வீடுகளும் இருந்தன. எல்லாம் தென்னேலைக் குடிசைகள். காணிகளும் அநேகமாக எல்லாம் உடையாருடையவை. சுற்றும் பார்த்தபடியே வேலுப்பிள்ளை நடந்து கொண்டிருந்தான். கூட வேலை செய்யும் பொன்னம்பலத்தின் வீட்டில் அழுகையும் பேச்சும் கேட்டன. மெதுவாக வேலியருகில் நின்று கவனித்தான்.

பொன்னம்பலத்தின் இளைய மகன் ''அப்பு கொப்பி வேண்டித்தா வாத்தியார்அடிப்பார்' என்ருன் அழுது கொண்டே, பொன்னம்பலம் தடிகொண்டு உறுக்கினர். ''என்னடா கொப்பி? இஞ்சை சஞ்சிக்கு வழியில்லை. நாசமாய்ப் போனவங்கள் அரிசியையும் ஒரு கொத்து வெட்டிப்போட்டாங்கள். உங்களுக்கு அறுவத்தெட்டுக் கொப்பி. நீ பள்ளிக் கூடம் போகவேண்டாம்''

'அட விஷயம் இது தானே?' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு நடந்தான் வேலுப்பிள்ளை. இஞ்சை ஆற்றை வீட்டிலைதான் இது நடக்கிறதிலை. எங்களடை சங்கக் காரியதரிசி சொன்னமாதிரி எல்லாம் இந்த முதலாளின்ரை அரசாங்கம் வந்துதான் இந்த அநியாயங்கள் எல்லாம். எண்டைக்காவது ஒரு நாள் இந்த அரசாங்கத்திலை இருக்கிறவங்களை இந்தக் குழந்தைப் பிள்ளையரின்ரை கோவம் ஒண்டே கலைச்சுப் போடும்' என்று நினைத்துக் கொண்டு நடந்தான்.

வயல் முகப்புக்கு வந்த வேலுப்பிள்ளை வரம்பிலே போய் நின்று கண்களைச் சுழற்றி வயல் முழுவதையும் ஒரு முறை பார்த்தான். ஒரு அரை வட்டம் உடம்பைத் திருப்பிப் பார்த்த பின்னர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். இருநூறு ஏக்கர் வயல் பூராவும் நெல் விளைந்திருந்தது. பாரத்தினுல் நாணித் தலை சாய்ந்திருந்த நெற்கதிர்கள், காற்றில் அலைஅலையாய் அசைந்து கொண்டிருப்பதைப் பார்க்க வேலுப்பிள்ளைக்குக் கொள்ளை ஆசையாக இருந்தது.

'கொஞ்ச காலத்துக்கு முன் காடாகக் காட்சியளித்த இந்த நிலம் இன்று ஆயிரம், ஆயிரம் ரூபாய்களைக் கொடுக்கும் வயல்! என்ன மாற்றம், எத்தனை நாள், எத்தனை பேருடைய உழைப்பு, எவ்வளவு வியர்வை. எவ்வளவு இரத்தம்,' இவையெல்லாவற்றையும் எண்ணிப் பார்க்க அவனுடைய மனம் புல்லரித்தது: அந்தக் காட்டை அழித்து, கட்டை பிடுங்கி, வரம்புகள் கட்டி, உழுது விதைத்து, நீர் விட்டு இன்று நெற்பயிராகக் காட்சியளிக்கும் வரை அவனுடைய வியர்வையும், இரத்தமும் அதில் கலந்திருந்தது.

'நாளண்டைக்குப் புதிர்' ஒருமுறை நினைத்துப் பார்த்தான் வேலுப்பிள்ளை.

'உழவனுடைய வாழ்க்கையில் 'புதிர்த்தினம்' எவ்வளவு சந்தோஷமான நாள். எத்தனையோ மாத உழைப்புக்கும், கஷ்டங்களுக்கும் பிறகு முதன் முதலாக தான் உண்டாக்கிய நெல்லை, சோருக்கி உண்ணும் நாள். அன்றைக்கு எல்லோருடைய மனமும், வீடும் எப்படி இருக்கும். எல்லாமே சந்தோஷமானது.'

'எவ்வளவு இன்பமான நாள் புதிர்நாள்'

★

புதிர் நாளன்று — திங்கட்கிழமை ஊரே கொஞ்சம் கலகலப்பாக இருந்தது. எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சிப் பிரவாகம். முதல் நாள் சங்கத்தில் கூடிய வேலுப்பிள்ளையும், ஏனைய அங்கத்தவர்களும், புதிர்நாளன்று மாலை ஊரில் விவசாயிகள் சங்கத்தின் கூட்டமொன்று போடுவதாகத் தீர்மானித்திருந்தனர். அதனுல் ஊர் இன்னும் கொஞ்சம் கூடுதலாக மகிழ்ச்சி ஆரவாரத்தில் அமிழ்ந்திருந்தது. நிலம் நன்றாக வெளிப்பதற்கு முன்பாகவே அதிகாலையில் எல்லோரும் புதிர் எடுப்பதற்காகக் கடகங்கள். பெட்டிகளுடன் கிளம்பி விட்டார்கள். வேலுப்பிள்ளையும் கையில் ஒரு கடகத்துடன் கிளம்பினன். வயலில் பெரியவர்கள், சிறுவர்கள் எல்லோருமாக ஏராளமானேர் குழுமியிருந்தனர்.

வேலுப்பிள்ளை முன்னுக்கு வந்து ஒரு கையில் அரிவாளுடன் வயலுக்குள் இறங்கினன் அவனுடைய மறுகை ஒரு கத்தை நெற்கதிர்களை அளாவிப் பிடித்தது. அதைத் தொடர்ந்து எல்லோரும் வயலில் குதித்தார்கள். அரிவாள்கள் 'சரசர' வென்று அறுக்கும் ஓசையையும் மீறி, ''டேய்! ஆரடாது வயலுக்குள்ளே'' என்ற குரல் இடி முழக்கம்போல் பின்னுலிருந்து கேட்டது. எல்லோரும் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தனர்.

சின்னையா உடையார் கையில் தடியுடன் வந்துகொண்டிருந்தார். அவருடைய முகத்தில் கனல் பறந்தது. வேலுப்பிள்ளை வரம்பில் ஏறிவந்து ' நாங்கள் தான் உடையார். புதிர் எடுக்க வந்தனுங்கள்'' என்ருன்.

''ஆரைக் கேட்டுப் புதிர் எடுக்கிறியள்? குழு மாடுகள் உள்ளிட்டது போலை உங்களை ஆர் வயலுக்கை இறங்கச்

11-ம் பக்கம் பார்க்க

## கடக்க முடியாத கஷ்டம் எதுவுமில்லை

சமுதாயத்தின் செல்வம் தொழிலாளர்களாலும், விவசாயிகளாலும், உழைக்கும் புத்திஜீவிகளாலும் சிருஷ்டிக்சப்படுகிறது. அவர்கள் தங்கள் விதியைத் தாங்களே கையில் எடுத்துக் கொண்டு ஒரு மார்க்சிஸ — லெனினிஸ நெறியைப் பின்பற்றி பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதற்குப் பதிலாக அவற்றைத் தீர்ப்பதில் தீவிரமான கண்ணேட்டம ஒன்றையும் எடுத்தால், அவர்களால் கடக்க முடியாத கஷ்டம் எதுவும் உலகத்தில் இராது.

-மா சே-துங்

## லாபவேட்டை!

1966 ல் சோவியத் யூனியனில் திரிபுவாத அடிப்படையில் தொழிற்சாலைகளின் நிர்வாக அமைப்பு மாற்றி அமைக்கப் பட்டது.

இந்த சீர்திருத்த முறையில் உற்பத்தி அதிகரிப்பும் விற்பனை அதிகரிப்பும் புறக்கணிக்கப் பட்டு லாபத்தை அதிகரிப்பதில் தான் கவனம் செலுத்தப் பட்டது. இதை சோவியத் யூனியனின் புள்ளி விபரங்கள் நிரூபிக்கின்றன. உற்பத்தி அதிகரிப்பு 8%, விற்பனை அதிகரிப்பு 1[illegible]% ஆனல் லாப அதிகரிப்பு 25%

இன்று சோவியத் யூனியனில் மக்களுடைய தேவை பூர்த்தி செய்வதற்குப் பதிலாக அதிக லாபம் பெறுவது தான் முக்கியமாகக் கருதப் படுகின்றது. சோவியத் யூனியன் முதலாளித்துவத்தை நோக்கி விரைவாகச் செல்கின்றது என்பதை நிரூபிக்க வேறு என்ன வேண்டும்?

# இறக்குமதியாகும் இந்தியப் பேச்சாளர்கள்

# இலங்கையில் பணம் சுருட்டுகிறார்கள்

## ஆசிரியருக்குக் கடிதம்

★

ஜூன் 10-ந் தேதி தங்கள் 'தொழிலாளி'யில் சலித்துக் கொண்டாராம், குறைபட்டுக் கொண்டாராம் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள விஷயம் உண்மை தான் என்பதை நான் அறிந்த சில தகவல்கள் கூறுகின்றன.

மதப்பிரச்சாரத்திற்கென்று இந்தியாவிலிருந்து பேச்சாளர்களை இறக்குமதி செய்வோர் சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும், பிற்போக்கு வாதிகளாககவும், ஏமாற்றுக்காரர்களான ஆஷாடபூதிகளாகவும் தான் இருக்கின்றனர். இறக்குமதி செய்யப்படும் பேச்சாளர்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தாம். அவர்கள் ''மதப் பிரச்சாரத்திற்கு'' என கூறிக் கொண்டு வந்தாலும், உண்மையில் அவர்களின் குறிக்கோள் பணம் சுரண்டுவதாகவே இருக்கிறது.

உதாரணத்திற்கு மீலாத் கூட்டங்களுக்குப் பிரசங்கம் செய்ய இந்தியாவிலிருந்து வருஷா வருஷம் பேச்சாளர்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வோரில் கொழும்பிலுள்ள பெரிய நவதானிய இறக்குமதி-விற்பனை வியாபாரிகளும் ஒரு கோஷ்டியினராவர். இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு இந்திய வியாபாரிகள் என்பதும் குறிப்பிடத் தக்கது. இவர்கள் பெரும் வர்த்தகர்கள், கொடூரமான கொள்ளை இலாபக்காரர்கள், பதுக்கல் பேர்வழிகள், முதலாளிகள். இப்படிப் பட்டவர்கள் தான் மக்களுக்கு மத உபதேசம் பண்ண இறக்குமதி செய்கிறார்கள், பேச்சாளர்களை.

இறக்குமதி செய்யப்படும் ''மதப்பிரசங்கிகளும்'' இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி துட்டடிக்க இலங்கைக்கு வருகிறார்கள். இப்படி வரும் பேச்சாளருக்கு இந்தியாவிலிருந்து வந்து போகும் செலவு, இலங்கையில் சுற்றுலாவுக்கு சொகுசான இலவசப் பயணம், தங்கியிருக்கும் நாள் அத்தனைக்கும் உயர்தரமான ஓசிச் சாப்பாடு-இப்படி எல்லாம் அளிக்கப் படுகின்றன. ஆனால் இவையெல்லாம் போதாதென்று, இலங்கையில் பல கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, ஒவ்வொரு கூட்டத்துக்கும் பேச்சாளருக்காக 300 ரூபா 500 ரூபா என்று வசூலிக்கப் படுகிறதாம் இப்படி ஆயிரக்கணக்கில் வசூலாகும் இப் பணம் பேச்சாளரை இறக்குமதி செய்வோரால் இந்தியாவுக்குக் கடத்தப்பட்டு அவருக்குக் கொடுக்கப்படுகிறதாம். இப்போது வந்துள்ள ஒரு பேச்சாளப் பிரமுகருக்காக ஒரு கூட்டத்திற்கு 500 ரூபா வசூல் செய்யப்படுகிறதாம். இலங்கை பூராவும் மீலாத் கூட்டங்களுக்குச் செல்லும் இப் பேச்சாளப் பிரமுகா இந்தியா திரும்பும் போது பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை சுருட்டிக் கொண்டு போய் விடுவார் என்று நான் அறிய வந்தேன்.

இப்படி மதப்போர்வையில், திரைமறைவில் நடைபெறும் சுரண்டல் எப்போது நிற்கும்?

இப்படிக்கு
**ஒரு வாசகன்**

## வியட்நாமிலிருந்தும் . . . . .

5-ம் பக்கத் தொடர்

சென்ற வாரம் நாம் இந்திரா காந்தியின் தென் கிழக்காசியச் சுற்றுலாவைப் பற்றி எழுதியிருந்த சமயம், அது அமெரிக்க ஏஜமானரின் கட்டளையை நிறைவேற்ற மேற் கொண்ட ஏவற்பேய் வேலையாகும் என்று குறிப்பிட்டிருந்தோம். முதலாளித்துவப் பத்திரிகைகள் இந்திராவின் விஜயத்தை ''நல்லெண்ணத் தூது'' என்று பூசி மெழுகினாலும், உண்மையில் அது சீனாவுக்கு எதிரான ஒரு புதிய அணியை (ஏற்கனவே பல இருக்கின்றன) உருவாக்குவது சம்பந்தமாகவே மேற் கொள்ளப் பட்டது என்று கூறியிருந்தோம். எமது ஊகம் முற்றிலும் சரியே என்பதை மாஜி இலங்கை பிரதமரும் அசல் ஏகாதிபத்தியப் பாதந் தாங்கியுமான கொத்தலாவலையைப் பல வழிகளில் நினைவூட்டும் ''மலேஷிய'' பிரதமர், ஓட்டைவாயன் துங்கு அப்துல் றஹ்மான் ருசுப் படுத்தியுள்ளார். இந்திராவின் விஜயத்தை அடுத்துச் சூட்டோடு சூடாகச் சென்ற கிழமை நடைபெற்ற ஐந்து நாடுகள் மாநாடொன்றில் பேசிய றஹ்மான், ஆயிரத்தித் தொளாயிரத்து எழுபத்தொன்றில் (1971) பிரிட்டிஷ் படைகள் தென் கிழக்காசியாவிலிருந்து முற்றாக வெளியேறும் போது சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுக்க ஆசிய நாடுகள் இராணுவ கூட்டணி ஒன்று நிறுவ வேண்டும் என கூறியுள்ளார். சீன தேசத்தின் எல்லைகளுக்கு அப்பால் ஒரு சீன போர்வீரனாவது இல்லை என்பது உலகமறிந்த உண்மை. ஏழாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள அமெரிக்கா தனது ''பாதுகாப்பு'' கருதி சீனாவின் வாசலில் படைகளை வைத்துள்ளது. கொரியாவிலிருந்து இந்தோனேஷியா வரை சீனாவை ''முற்றுகை'' இடும் வியூகம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. உண்மை நிலை இவ்வாறிருக்கவும் சீனாவின் விஸ்தரிப்பு என்று றஹ்மான் கூறுவது வழக்கமான பூர்ஷ்வாப் பித்தலாட்டமே. கிழடு தட்டிய ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தற்காலத்தில் அமெரிக்கா விடமிருந்து பென்டிஷன் பெற்றுக் கொண்டு தனது ''பொறுப்புக்களை''யும் ஒப்படைத்து வருகிறது. ஏகாதிபத்திய முகாமுக்குத் தலைமை தாங்கும் அமெரிக்காவும் உலகமெங்கும் தலையைப் போட்டு வருகிறது. ஆகவே றஹ்மானின் சூத்திரதாரி அமெரிக்கா என்றால் அது தவறாகாது. வெளித் தோற்றத்துக்கு ''மலேஷியா'' ஒரு நடுநிலைமை நாடு என்று கூறப்படுகிறது. ஆனால் வர வர அது அமெரிக்கச் செல்வாக்குக்கு உட்படுவது பலரும் அறிந்ததே.

இத்தகைய ''மலேஷியா'' சுதந்திர நாடென்று கூறிக் கொண்டு உறவுகளை வளர்க்க முற்பட்டுள்ளது சோவியத் யூனியன். சென்ற மாதம் ''மலேஷியா'' உதவிப் பிரதமரும், பல வழிகளில் ஜே. ஆரை ஒத்த வருமான துன் அப்துல் றஸாக் சோவியத் திரிபுவாத தலைமைப் பீடத்தின் அழைப்பின் பேரில் மொஸ்கோ சென்று பேச்சு வார்த்தைகள் நடத்தினார். சென்ற வருடம் பிற்பகுதியில் இரு நாடுகளுக்கும் ''இராஜதந்தர உறவுகள்'' ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து ''மலேஷியா'' படுபிற்போக்கு வாதிகளின் புதிய—உற்ற நண்பனாக சோவியத் யூனியன் விளங்குகிறது. மே 22-ந் தேதி வரை சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த றஸாக் ''சர்வ தேசப் பிரச்சினைகள் குறித்தும் சிறப்பாகத் தென் கிழக்காசியில் சமாதானம் குறித்தும் இரகசியப் பேச்சுவார்தைகள் நடத்தினார்'' என்று டாஸ் அறிவித்தது. அதன் எதிரொலி றஹ்மானின் சீன எதிர்ப்புப் பிரச்சாரம் என்று ஊகிப்பது தவறாகாது, இதிலே கவனிக்க வேண்டியது என்னவென்றால் றஸாக் மொஸ்கோவிலிருந்த போது, சோவியத் யூனியனிடமிருந்து யுத்த தளபாடங்கள் பெறும் சாத்தியக்கூறு பற்றியும் ''இரகசிய'' பேச்சுகள் நடைபெற்றதாகக் கூறும் செய்திகளாகும். மே 10-ந் தேதி அதாவது மொஸ்கோவுக்குப் போகு முன் லண்டனில் நிருபர்களுடன் பேசுகையில் றஸாக பின் வருமாறு சொன்னார்.

''யுத்த தளபாடங்கள் பற்றி நிச்சயமாக ரஷ்யர்களுடன் நான் உரையாடுவேன். ரஷ்ய ஆயுதங்கள் மேல் எமக்கு எது வித மன வெறுப்பும் கிடையாது. உண்மையில் ரஷ்யர்கள் எமக்கு நல்ல நண்பர்கள்''

அமெரிக்காவின் கைப்பொம்மைகளான ''மலேஷிய'' ஆளுங் கூட்டத்தினர் தமது நாட்டிலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்ட விரோதமாக்கியுள்ள கும்பல்-சீன எதிர்ப்பு அணி உருவாக்க முனைந்துள்ள குழுவினர்—சோவியத் யூனியனை ''நல்ல நண்பன்'' என்று கூறுவது வேடிக்கையாகத்தானிருக்கிறது. ஆனால் இன்றைய உலகில் சோவியத் திரிபுவாதிகளின் கொள்கையற்ற செயல்களைக் கண்டு சிரிப்பதா. அழுவதா என்றுதான் தெரியவில்லை. ஏறத்தாழ மூன்று லட்சம் முற்போக்குவாதிகளைக் கொன்று குவித்துள்ள இந்தோனேஷிய சுகார்த்தோ—நசுதியன் பாசிஸக் கும்பலுக்குத் தொடர்ந்து இராணுவத் தளவாடங்கள் ''வழங்கி'' வரும் ரஷ்யா இதுவும், செய்யும், இன்னமும் செய்யும். அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கை கோர்த்து ஒத்துழைக்கும் மற்றொரு உதாரணமே ''மலேஷியா.''

## புதிர்

—10-ம் பக்கத் தொடர்

சொன்னது?'' உடையார் சீறினார். எல்லோருமே அசந்து விட்டார்கள். அத்தனைபேருக்கும் உடையார் அப்படிப் பேசியது புதிராகப் போய் விட்டது. 'புதிர் எடுக்கிறதுக்கு ஏன் கேட்கவேணும்?' என்று எல்லோரும் யோசித்தனர். வேலுப்பிள்ளை தயங்கியபடி கூறினான். ''புதிர் எடுக்கிறதுக்கு ஏன் கேக்க வேணும் எண்டு நினைச்சம். போன முறையும் கேளாமல் தானே எடுத்தனுங்கள். எங்கையும் கேட்டு எடுக்கிற வழக்கம் இல்லை. பொவிக்காதையுங்கோ கேளாமல் எடுத்ததுக்கு.'' வேலுப்பிள்ளை சொல்லி முடிக்கவில்லை. கோபாவேசத்துடன் உடையார் சொன்னார்.

'ஓகோ அந்தளவுக்கு வந்திட்டியளோ... என்னுடைய வயலிலை களவாகப் புதிர் எடுக்கிறதுக்கு உங்களுக்கு என்ன துணிவு! எல்லாரும் வயலுக்கிளால் வெளிக்கிடுங்கோ... ஒருதரும் புதிர் எடுக்க கூடாது. இருபத்தைஞ்சு பேரும் புதிர் எடுக்கிறம் எண்டு சொல்லிக் கொண்டு கடகங்கள், பெட்டியள் முட்ட கதிர் அறுத்தால், எவ்வளவு நெல்லு எனக்கு நட்டம். வயலுக்குள்ளே இருக்கிற நெல்லு முழுவதும் கிளிநொச்சியிலை இருக்கிற மில் முதலாளி ஒருதருக்கு வித்தாச்சு. ஒருதராவது வயலுக்கை இருந்து ஒரு நெல் மணியையாவது எடுக்கக் கூடாது.''

''எங்கடை மிச்சச் சம்பளம் தராட்டாலும் எங்களைப் புதிர் எடுக்க விடுங்கோ உடையார். நாங்கள் கமக்காரர். புதிர் எடுக்கிறது எங்கள் உரிமை இதைப் பறிக்காதிங்கோ' என்றார் பொன்னம்பலம்.

''அதுதான் முடியாது. அதென்ன உரிமை யெண்ட பேச்சு. உங்களைப் புதிர் எடுக்க விட்டிட்டு மில் முலாளிக்குநான் பதில்சொல்லேலாது. நீங்கள் கூலிக்கு வேலை செய்யிறியள். உங்களுக்குச் சம்பளம் தாறன் தானே! பிறகென்ன புதிர்? மிச்சச் சம்பளம் பற்றிக் கதைக்கிறியள். அது கூடத் தாறதுக்கு நியாயமில்லை. கிழமைக்கு பத்து ரூபா தந்தாச்சு. என்ரை காணிக்கை குடியிருக்கிறியள். அதுக்குக் குத்தகைக காசும் கழிச்சால்...... கணக்குச் சரி. பிறகென்ன வீண் கதை'' உடையார் சொன்னதைக் கேட்டு, ''என்ன!'' என்று குரலெழுப்பினர் எல்லோரும். எல்லோருடைய கண்களிலும் கோபம் தெறித்தது. வாய்கள் துடிதுடித்தன. ''அது முடியாது; நடக்காது; நடக்க விடம்.'' என்று வேலுப் பிள்ளை ஆத்திரத்தில் கத்தினான். வேலுப்பிள்ளை கத்தியதைக் கேட்ட உடையார் இரண்டடி முன்னால் வந்து, தடியை நிலத்தில் ஊன்றியபடி கோபத்துடன், ''என்னடா சொன்னாய்'' என்றார்.

எல்லோருக்கும் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. வேலுப்பிள்ளை சொன்னான். ''நாங்கள் இண்டைக்குப் புதிர் எடுக்கிறது எடுக்கிறது தான். நீங்கள் செய்யிறதைச் செய்யுங்கோ. எங்கடை மிச்சச் சம்பளம் தரத் தேவையில்லை. வயலிலை இருக்கிற முழு நெல்லையும் எடுக்க எங்களுக்குத் தெரியும். வயலாக்கி, விதைத்து, நீர்விட்டு நெல்லாக்கிய நாங்கள், வயலுக்குள்ளே புதிர் எடுக்க ஏலாது எண்டால் சும்மா இருந்த நீ எப்படி முழு நெல்லையும் எடுத்து விற்க முடியும்? அதுக்கு நாங்கள் கடைசி வரையும் விட மாட்டம் வயலுக்குள் இருந்து ஒரு நெல் மணியையாவது நீ எடுத்துக் கொண்டுபோக விட மாட்டம். எங்கடை ஒவ்வொருத்தற்றை வேர்வையும், இரத்தமும் இதிலை கலந்திருக்கு அதை சும்மா இருந்த இன்னொருவன் கொண்டு போய் விற்றுச் சுக போகம் அனுவிக்க விட மாட்டம்.''

உடையாருக்கு நெஞ்சு 'திக்' என்றது. ''என்னடா சொன்னாய், நான் பணம் செலவழிச்சுச் செய்த வயலுக்கை இருந்து நான் நெல்லு எடுக்க கூடாதா? என்ன திமிர் உங்களுக்கு. வேலுப்பிள்ளையும் நீயும் உன்ரை ஆட்களும் ஆற்றை காணிக்கை குந்தியிருக்கிறியள், ஆற்றை காசாலை வாழுறியள் எண்டதை மறந்து போகாதை. எல்லாம் எனக்கு விளங்குதடா. அந்த விவசாய சங்கத்திலை சேர்ந்த பிறகு தான் நீங்கள் இப்படியெல்லாம் கதைக்கப் பழகியிருக்கிறியள். எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டுறன் பாருங்கோ.'' என்று அதட்டினார் சின்னையா உடையார்.

—12-ம் பக்கம் பார்க்க

# யு.என்.பி. 'அதிர்ச்சி'ப் படை ஒன்றை அமைக்கிறது

பல முனைகளிலிருந்தும் தாக்கப்பட்டுள்ள யு. என். பி. வெறிகொண்ட மிருகம் போல் நாலா பக்கமும் அலைந்து திரிகிறது.

தனது எதிரிகளையும், தன்னைக் கண்டிப்பவர்களையும் வீழ்த்துவதற்காகவும், பதவியில் எப்படியாவது தொடர்ந்து இருப்பதற்காகவும் பலவித அதிர்ச்சித் தந்திரங்களை யு. என். பி. சடைப்பிடிக்கிறது. அதிகாரத்தின்—பதவியின்—துணை கொண்டு அவற்றின் பின்னுல் இருந்தபடி, சில ஊறிப்போன யு. என். பி. அங்கத்தவர்கள் அதிர்ச்சிப் படை ஒன்றை அமைத்திருக்கின்றனர்.

மாவட்ட சபை பிரச்சினையின் மீது யு. என். பி. தலைமைக் காரியாலயத்திற்கு வெளியே பௌத்த குருமார் சிலர் நடத்திய சமாதான ஆர்ப்பாட்டத்தின் போதே யு. என். பி. இப்படையை அமைத்து வைத்திருக்கிறதென்ற உண்மை வெளியே வந்தது.

பச்சைச் சட்டை அணிந்திருந்த குண்டர்கள் இப்பௌத்த குருமார் மீது வசை மாரி பொழிந்து அவர்களை மிரட்டிக் கொண்டிருந்தபோது அங்கு குழுமியிருந்த பொலிஸ் படையினர் கண் மூடி மௌனியாகப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

பிரதமர் அங்கு கூடியிருந்த பௌத்த குருமார்களின் சிலரைக் கொண்ட தூது கோஷ்டியைச் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்து, அவர்கள் அவரைக் காணத் தயாராகிக் கொண்டிருந்த போது இந்தப் பச்சைச் சட்டைக் குண்டர்கள் அப்பௌத்த குருமாரைப் பயமுறுத்தினர். இந்தக் குண்டர்களுக்கும் பௌத்த குருமாருக்கும் ஏற்படவிருந்த கைகலப்பைத் தவிர்ப்பதற்குப் பிரதமரே தலையிட நேர்ந்தது என அறிய வருகிறது.

மீதியாயுள்ள பதவிக் காலத்தைக் கழிப்பதற்குப் போராடிக் கொண்டிருக்கும் பிற்போக்கு யு என். பி., உருட்டி மிரட்டுவதைத் தனது கடைசி ஆயுதமாகப் பாவிக்கிறது போல் தெரிகிறது.

யு. என். பி, யின் உருட்டு மிரட்டல்கள் பல விதங்களில் தென்படுகிறது. உதாரணமாக, காடையர் கூட்டமொன்று அண்மையில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவரை அவரின் அலுவலகத்திற்கே சென்று ஈவிரக்கமற்ற முறையில் தாக்கியது. இச்சம்பவம் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், இராப்போசன விருந்தொன்றில் யு. என். பி. தலைமைப் பீடத்தை அவர் சண்டித்ததே அவர் செய்த ஒரேயொரு 'குற்றமாகும்'

யு என். பி. தலைமைப் பீடத்துடன் நெருங்கிய தொடர்புள்ள சிலரோடு அரசியல்பற்றி அவர் விவாதித்ததாகத் தெரிய வருகிறது.

---

**அறிவித்தல்**

**சி. டி. யு. எப். பின் புதிய தொலைபேசி எண்**

**2 0 3 6 5**

---

## புதிர்

◎ — 11-ம் பக்கத் தொடர்

பொன்னம்பலம் கொஞ்சம் முன்னுலே வந்து சொன்னுர். ''என்ன உடையார் ஐயா, ஆரை வெருட்டிறியள். எங்களுக்கு ஒண்டும் தெரியாது எண்டு நினைச்சியளோ. உங்கடை தான் பணம். அதை ஒத்துக் கொள்ளுறம். ஆனல் உங்கடை பணத்தை கொண்டு வந்து வயலுக்கை கொட்டின உடனே நெல்லு விளையுமோ? நாங்கள் கஷ்டப்பட்டு வேர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, பட்டினி கிடந்து, ஏன் ஆனைக்கு உயிர்ப்பலி கூடக் குடுத்து உழையாமல் விட்டிருந்தால், இந்தக் காடு களனியாகி நெல்லு விளைஞ்சிருக்குமோ? இந்த இரு நூறு ஏக்கர் வயலுக்கையும் நீங்கள் எண்டைக்காவது குனிஞ்சு ஒரு புல்லுப். பிடுங்கியிருப்பியளோ? இல்லைக் கேட்கிறன். நாங்கள் சங்கத்திலை சேர்ந்திட்டது கண்டு துள்ளுறியள். ஓம். நாங்கள் சங்கத்திலை சேருவம். அதைக் கேட்க நீங்கள் யார்? எல்லாரும் சங்கம் வைச்சிருக்கிற பாதிரி, கமக்காரர்களான நாங்களும் எல்லாரும் சேர்ந்து சங்கம் அமைச்சு எங்கடை கஷ்டங்களுக்காக, உரிமையளுக்காகப் போராடினுல் என்ன? கமக்காரரை உருட்டுறது மிரட்டுறது எல்லாம் அந்தக் காலம். இப்ப நாங்கள் சங்கம் தொடங்கி உரிமை கேட்க வெளிக்கிட்டிருக்கிற காலம். இதை ஒருக்கால் நீங்கள் யோசிச்சுப் பாக்க வேணும்.', பொன்னம்பலம் ஆத்திரத்தில் சொல்லி முடித்தார்.

''பொன்னம்பலம், வேலுப்பிள்ளை எல்லாருக்குந்தான் சொல்லுறன். அந்த இந்த வீண் கதையள் ஒண்டும் வேண்டாம். பேசாமல் எல்லாரும் வயலுக்கிளாலை வெளிக்கிடுங்கோ. இல்லாட்டில் பொலிசைத்தான் கூப்பிட வேண்டி வரும்'' என்று அதட்டினுர் உடையார்.

வேலுப்பிள்ளை தலையைச் சரித்து உடையாரைப் பார்த்தபடி இடுப்பில் கையை வைத்துக் கொண்டு சொன்னுன். ''என்ன வெருட்டிறியளோ. பொலிஸ் எப்பவும் உங்களைப் போலை ஆட்களுக்காகத்தான் வரும் எண்டு நாங்கள் படிச்சி வைச்சிருக்கிறம். ஆனல் நாங்கள் உதுகளுகெல்லாம் பயப்பிடத் தயாராய் இல்லை பொலிஸ் என்ன பட்டாளம் என்ன, கடவுளையே தான் கூட்டி வந்தாலும் நாங்கள் வயலை விட்டிட்டு அசைய மாட்டம். எங்களிட்டை நியாயம் இருக்கு. பிறகு நாங்கள் இந்த உலகத்திலே ஆருக்குப் பயப்பிட வேணும். ஆர் வந்தாலும் பதில் சொல்ல தயாராயிருக்கிறம்.''

உடையாருக்கு கோபம் பொறுக்கவில்லை. ''இப்பவே போய் பொலிசைக் கூட்டி வந்து என்ன செய்யிறன் எண்டு பாருங்கோ'' என்றபடி அவசரம் அவசரமாக நடந்தார்.

வேலுப்பிள்ளை அரிவாளை இறுகப் பிடித்தபடி கூட நின்றவர்களுக்குச் சொன்னுன் ''ஏன் நிக்கிறியள். வயலுக்கை இறங்கி கதிரை அருங்கோ. இப்பதான் எங்கடை வாழ்க்கையிலை கிழக்கு வெளிக்குது. எல்லாம் சங்கம் தந்த பலன் தான்.''

எல்லோருடைய கைகளும் அரிவாளையும், நெற்கதிர்களையும் இறுகப் பிடித்தன. நெற்கதிர்களை வெட்ட, வெட்ட அவர்களுடைய அரிவாள்கள் கூர்மையாகிக் கொண்டிருந்தன.

—முற்றும்—

---

◎ — 9-ம் பக்கத் தொடர்

மானத்தை ஏற்றுக் கொண்டார். இதன் அர்த்தமென்ன? சோவியத் திரிபுவாதக் கும்பல் காலைவாரி விட்டதைத் தெரிந்துகொண்ட பின்புதான் நாஸர் யுத்த நிறுத்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. ''எதிர்பார்த்த நண்பர்கள்'' உதவவில்லை என்று நாஸர் கூறியதிலிருந்து இது மேலும் ஊர்ஜிதமாயிற்று. இப்படிக் காலைவாரி விட்டது மட்டுமல்லாமல், யுத்த நிறுத்தத் தீர்மானத்தின் மூலம் அராபிய மக்களின் கையைக் கட்டிவிட்டது அவர்களின் கையிலிருந்த ஆயுதத்தைக் கீழே போடச் செய்தும் விட்டது.

இதன் அர்த்தம் என்ன? மாஸ்கோ அராபிய மக்களின் நலன்களை விற்று விட்டதும், அமெரிக்க - இஸ்ரேல் ஆக்கிரமிப்பைப் பாதுகாப்பதும் அராபிய எல்லையின் பரந்துபட்ட நிலத்தை உள்ளடக்கிய இஸ்ரேலின் விஸ்தரிப்பை அங்கீகரிப்பதும்தானே!

ஏகாதிபத்திய வாதிகள் தமது கைப் பாவையான ஐ. நா. சபை மூலம் ''சமாதானம்'' என்ற முத்திரையில் நடத்திய - நடத்தி வருகின்ற அரசியல் மோசடிகளும் ஆக்கிரமிப்பு உபாயங்களும அநேகம். ஏகாதிபத்திய வாதிகளின் இந்த எத்து வேலைகளுக்கு, சமீப காலமாக உடந்தையாக இருந்து வருகிறது சோவியத் திரிபுவாதத் தலைமை. இதனை இந்தச் சம்பவம் மேலும் அப்பட்டமாக அம்பலப்படுத்திவிட்டது.

இதன் பின்பு... இஸ்ரேல் பிடித்த இடங்களை விட்டுத் தனது பழைய எல்லைக்கு வாபஸாக வேண்டும் என்று விசோயத் யூனியன் தீர்மானம் கொண்டு வந்ததும். கொஸிஜின் ஐ. நா. சபைக்கு ஓடிச் சென்றதும் அராபிய மக்களை மீண்டும் ஏமாற்றுவதற்காக நடித்த நாடகமாகும்.

பழைய எல்லைக்கு இஸ்ரேல் வாபஸாக வேண்டும் என்ற நாடகமாடும் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் இன்றைய யதார்த்த நிலை என்ன? இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்து ஓர் அங்குல நிலத்திலிருந்தாவது வாபஸாகியிருக்கிறதா? ஜெருசலத்தின் ஜோர்டான் பகுதி, நப்ளஸின். ஹெப்ரொனின் புறப்படைப் பகுதிகள், இஸ்ரேலின் கிழக்கிலிருந்து ஜோர்டான் நதியின் மேற்குக் கரைப் பகுதி வரை. வட முனையில் சிரிய உயர்பீட பூமியின் மாஸாதீவிலிருந்து குனைத்திரா வரையும், தென் கிழக்கிலிருந்து பூபோமிஜா யார்முக் நதியின் முனையிலுள்ள நீர்ப்பகுதி, ஜோர்டானின் பெரும் உபநதிகள், கலிலி சமுத்திரத்தின் கிழக்கில்—சிரியாவுக்கும் ஜோர்டானுக்கும், எகிப்தின் முழு சினய் பாலைவன தீபகற்பத்திலிருந்து சுயஸ் கால்வாய் வரைக்கும் மின்சாரம் வழங்கும் டிராண் நீரிணையைக் காக்கும் அல்ஷெய்க், அக்கடல் பகுதியான அகபாவளைகுடா வரையும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு இருந்து வருகிறதே—ஒரு வருஷமும் ஆகிவிட்டதே—இஸ்ரேல் இங்கிருந்து ஓர் அடி கூட வாபஸாகி விட்டதா? இல்லை! ''ஈரட்ஸ் இஸ்ரேல்'' (மாபெரும் இஸ்ரேல்) என்ற அதன் விஸ்தரிப்புக் கனவு பெரும்பாலும் நனவாகிவிட்டது இதனை சோவியத் திரிபுவாதிகளும் அவர்களின் உள்ளூர் குஞ்சுகளும் மறுக்க முடியுமா?

இவை மட்டுமா, ''யுத்த நிறுத்தம்'' ஏற்பட்ட பிறகு இஸ்ரேல் கைப்பற்றியுள்ள அகபா வளைகுடாவுக்குள் நுழைந்த முதற் கப்பல் சோவியத் கப்பல்தான் என்பதையும், அத இஸ்ரேலியர்கள் ஆரவாரத்துடன் வரவேற்றதையும் நினைவில் கொள்வது நல்லது. மேலும், இஸ்ரேலுக்கு உதவிய — உதவுகின்ற ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் விநியோகம் செய்ய மாட்டோம் என்று அராபிய நாடுகள் தீர்மானித்ததும், இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அந்நாடுகளுக்கு எண்ணெய் விநியோகம் செய்ய முன்வந்தது சோவியத் யூனியன். பிரிட்டனுக்கு வேண்டிய எண்ணெயைச் சப்ளை செய்ய லண்டனிலுள்ள சோவியத் தூதுவர் பேச்சுவார்த்தையும் நடத்தினுர். இவ்வாறு அராபிய நாடுகளின் துயரத்தின் மீது எண்ணெய் வியாபாரம் மூலம் — தனது சொந்த நலனுக்காக—சோவியத் திரிபுவாதத் தலைமை கோடி கோடியாகச் சம்பாதிக்கிறது.

—அடுத்த இதழில் முடியும்.

---

◎ — 1-ம் பக்கத் தொடர்

னர் நுவரேலியாவில் நடைபெற்ற இத்தகைய மாநாட்டின்போது இந்தியத் துணை வெளிவிவகார அமைச்சர் திருமதி லட்சுமிமேனன் முக்கிய பாத்திரம் வகித்தார்.

இம்முறை தீவிர கம்யூனிஸ விரோதியான ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமை தாங்குகின்ருர்.

---

## சி. டி. யு. எப். பின் புதிய உத்தியோகஸ்தர்கள்

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் 18 வது மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட பொதுச் சபை, அதன் முதல் கூட்டத்தில் கீழ் காணும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தது. தோழர் வாட்சன் பெர்ணண்டோ தலைமை வகித்தார்.

உபதலைவர்கள்:

தோழர்கள் ஹிக்கொட தர்மசேன, சமல் டி. சில்வா, ரொசாரியோ பெர்ணண்டோ, ஸ்டீவன் கொஸ்தா.

உப-காரியதரிசிகள்:

தோழர்கள். எம். சி. எம். சாபி, ஏ. ஆர். எட்மன்

செயற்குழ அங்கத்தவர்கள்:

தோழர்கள்: சிரில் குலதுங்க, எஸ். டி. சாகுல் ஹமீது, டி ஏ. சேதுங்க, வி. எச். பெரேரா.

தலைவராக தோழர் வாட்சன் பெர்ணண்டோவும், பொதுச் செயலாளராக தோழர் என். சண்முகதாசனும், பொருளாளராக தோழர் கே. குலவீரசிங்கமும் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனின் பிளேஸ் '-2, கொழும்பு அச்சிட்டது: ''தொழிலாளி'', அச்சகம் 121, யூனியன் பிளேஸ், கொழும்பு -2